
# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

தி.மு.க. வார வெளியீடு

2-6-61 ] :-: ] விலை 16 காசு




போன அயர்ஈக்கு 22 மைலில் ஈச்மென் தன் கையாலேயே கட்டிக்கொண்டு வாழ்ந்த வீடு......





ஒரு நாளில் சேர்ந்த காலணிகள்! கொலையுண்ட யூதர்களுடையவை இவை ஜெர்மன் ராணுவத்தினருக்குக் கொடுக்கப்பட்டன.




ஈச்மென்னின் ஒரு நாள் வெற்றி! இவ்வள [illegible]



ஈச்மென் மேசையிலிருந்த 'பேப்பர் வெயிட்' பொம்மையல்ல! அசல் மனிதன் தலை!!





பார்த்தீரோ, பிணக்குழியை! இதைப்போல் 60 லட்சம் பேருக்கு எத்தனை வெட்டப்பட்டிருக்கும்?



இதுதான் 'நச்சு வாயு அறை' உள்ளே அடைத்துத் திறந்தால் பிணமாகியிருப்பர்





லாரிகளிலேயே கொன்று தள்ளப்பட்ட யூதர்களின் பிணங்கள்!

# கழகத்தின் பெயரால் பெற்ற எம். பி. பதவியை ஏன் விடவில்லை? கழக நிதியை ஏன் சம்பத் ஒப்படைக்க வில்லை?--

கழகத்தைவிட்டுச் சென்ற தோழர் சம்பத்து, கழகத்தின் பெயரால் வெற்றி பெற்ற எம், பி. பதவியை ஏன் விடவில்லை? தன் வசமிருந்த கழக நிதியை ஏன் ஒப்படைக்க வில்லை கழகத்திடம்? — நியாயமான இந்த இரு கேள்விகள், நித்தம் நித்தம் பேசப்படுகின்றன மக்களிடையில்! அரசியல் நாணயம் கொண்டோர், தான் ஏற்றிருந்த கொள்கையினின்றும் மாறுபடும்போது, பழைய இடத்திலிருந்து பெற்ற பதவியை உதறி விட்டு, புதுக் கொள்கையைப் பேசி அதன் அடிப்படையில் மீண்டும் அப்பதவியை அடையவே நினைப்பர் அன்பர் சம்பத் அரசியல் நாணயத்தை உண்டாக்குவதற்காகவே, புதுக்கட்சி கண்டதாக ஓடோடி ஊர் ஊராகப் பேசுகிருர். அப்படிப்பட்ட நாணயஸ்தர் ஏன், பதவியைத் துறந்து, எடுத்துக் காட்டாக விளங்கவேண்டுமென்று எண்ணவில்லை? சாதாரண ஆளாக இருப்போரே, இதுபோலச் செய்வது தான் அரசியல் நாகரீகம் எனும் போது ஒரு 'தலைவனுக' விளங்கும் ஆவல் கொண்டுள்ள அன்பர், ஏன இந்த விஷயத்தில் பிடிவாதம் காட்டவேண்டும்? பதவியா பெரிது, பொதுவாழ்க்கைக்கு! அரண்மனை, அழகு மனைவி, அருமை மகன் ஆகியோரைத் துறந்த புத்தரைப்போல புருவத்தை உயர்த்தியும், மார்பை நிமர்த்தியும், வார்த்தைகளை யோசித்து யோசித்துப் பேசியும் 'தலைவனுகி' விட்ட தகுதியினை உலகுக்குப் பரப்பும் இந்த 'உத்தமருக்கு'ப் பார்லிமெண்டு உறுப்பினர் பதவியா ஒரு பெரிது!! ஏன் அதை எறியவில்லை தூக்கி? கழக உறுப்பினர் என்பதை எடுத்தெறியும்போது ஏற்பட்ட தைரியம், ஏன் ஏற்படவில்லை 'எம். பி' பதவியை எறிய? என்ன காரணம்! ஒரு கட்சியை விட்டு விலகலாம்—புதுக் கட்சித் துவங்கலாம்—புத்தர்போல அறநெறி கிளப்பவே கிளம்பி விட்டேன் என்று அறிக்கைகளில் சொல்லலாம்—அப்படிப் பட்டவருக்கு, எம். பி.' பதவியா பெரிது? ஏன் இதையும் ராஜினம செய்துவிட்டு, ஒரு எடுத்துக்"காட்டாக யிருக்கக்கூடாது! அவர் செய்யமாட்டார்—அவருடைய 'இரும்புப் பெட்டி' அதைச் செய்ய விடாது—அவருக்குள்ள 'ஆசை'கள் விடமாட்டா அவரை—அதனையே, நம்தோழர்கள், எண்ணிப் பார்ப்பதோடு எடுத்தும் இயம்பவேண்டும், கேள்வி கேட்போரிடம்.

எம். பி. பதவி அப்படியென்ன, பொன் காய்க்கும் சுரங்கமா! போகப் பொருளா!! என்பீர்கள். பதவி, என்பதில் ஆசை கொண்டுவிட்ட பூர்ஷ்வாக்கள், அதைப் பெறுவதிலும் பெற்றதை வைத்து இன்னும் 'பல' பெறுவதிலும்தான் ஈடுபடுவரே ஒழிய, இழக்கத் துணியார். அந்தப் 'பதவி ஆசை' சம்பத்தையும் விடவில்லை, இன்னும் சில 'பதவிகள்' கிடைக்குமாயின் போய் விடுவார் எதையும் விட்டு, என்பதையே இவை உணர்த்துகின்றன!!

ஆனல், இதை ஒப்புவாரா அவர்? பேச்சுத் திறமை இங்கே கற்றதாயிற்றே! அதனல், போகுமிடங்களில் கேட்கிருராம் 'என்னை யென்ன கழகமா, எம். பி. ஆக்கிற்று?' என்று. தன்னுடைய சொந்த செல்வாக்கால், எம். பி. ஆனராம் சம்பத்! அந்த செல்வாக்கால், ஈரோடு நகர சபையைப் பிடிக்க முடிந்ததா சம்பத்தால்? வேண்டாம், அந்த செல்வாக்கால் ஈரோட்டிலிருக்கும் தி. மு. க வை கழகத்திலிருந்த போது தன் வயப்படுத்த முடிந்ததா இவரால்? இப்போதும், இவர் எம். பி. பதவியைவிட்டு விலகி, சொந்த செல்வாக்கைக் கொண்டு வெற்றி பெற முடியுமா! தயாரா!! என்பது ஒருபுறமிருக்க, தேர்தலில் இவர் சொந்த செல்வாக்கைக் கொண்டு வென்ருர் என்பது உண்மை என்று பார்ப்போம். 'நான் பெரியாரின் அண்ணன் பிள்ளை. நான் நன்ருக பேசுவேன். எனக்கு ஓட்டுப் போடுங்கள்- எனக்கு எந்தக் கட்சியோ, கொள்கையோ கிடையாது,' என்ரு இவர் ஓட்டுக்கேட்டார்? இல்லை யில்லை! இவருக்காக அறிஞர் அண்ணு உள்பட எல்லாத் தலைவர்களும் போய்ப்பேசினர்கள். அதுமட்டுமல்ல, தேர்தலின்போது இவர் என்ன சொல்லி ஓட்டுக்கேட்டாராம் தெரியுமா— இதோ, அவருடைய சொந்த ஊரான ஈரோட்டு தி. மு. க. செயலாளர் தோழர் ப. ச. விசுவநாதன், தேர்தலின்போது சம்பத்து போட்ட துண்டறிக்கையை நமக்கு அனுப்பிவைத்திருக்கிருர். சேலம்—குகை ராஜு பிரசில் அச்சடிக்கப்பட்ட அந்த அறிக்கையில், வாக்காளர்களுக்கு தோழர் சம்பத் விடுத்த வேண்டு கோளின் பகுதிகள் '...தென்ஞட்டு மக்களின் நலன்களுக்காகவும், உரிமைகளுக்காகவும், வடநாட்டு ஏகாதிபத்தியத்துடன் போராடக் கூடிய திராவிடர்களின் தேசியஅணி திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றேயாகும், நாளுக்கு நாள் அரசியலிலும், பொருளாதாரத்திலும் திராவிடம் புறக்கணிக்கப்பட்டு வடவரின் ஆதிக்கப்பிடி வலுப் பெற்று வருவது கண்கூடு...

'...திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றே ஒன்றுதான் வடவரின் அரசியல் பொருளாதார ஆதிக்கச் சுரண்டலை எதிர்த்துப் போரிட்டு வருகிறது...''

'எனவே திராவிடத்தின் விடுதலைக்குப் போரிடும் திராவிடமுன்னேற்றக் கழகத்திற்கு வெற்றித் தேடித்தருமாறு வேண்டுகிறேம்'

ஓட்டுக் கேட்டபோது விடுத்த வேண்டுகோள், இது! அந்த சம்பத்து தான், சொந்த செல்வாக்கால் வென்றேன் என்கிருர்!! இருக்கட்டும், இவருக்குள்ள சொந்த செல்வாக்கையே ஒப்புவோம். அந்த செல்வாக்குக்குடும்பத்தால் வந்ததா, கூடியிருந்த தி. மு. க. அளித்ததா என்பது கூட ஒருபுறமிருக்கட்டும். தேர்தலுக்காக இவர் செலவு செய்த பணம் யாருடையது? இரும்புப் பெட்டியைத் திறந்து, இவர் கொண்டு வந்தா செலவழித்தார்! ''ஐயோ! தெரியாது உங்களுக்கு பணம்பணமாய் வாரி விட்டேன்!'' என்று தன் ''பெருமானத்தை'' வைத்து இன்றைய சம்பத், பேசக்கூடும். அப்படிச் செலவழித்த பணத்தில், 'தி. மு. க' விலிருந்து எந்தப் பணமும் இவர் வாங்கவில்லையென்று சொல்ல முடியுமா? இதோ, கணக்கு, எமக்குத் தெரிந்தமட்டில்.

சம்பத் சொந்தச் செலவுகளுக்காக ரூ, 2000

சம்பத் மூலம் மற்ற தொகுதிகளுக்காக:

சேர்ந்தமங்கலம் நாமக்கல் அரவக்குறிச்சி தொகுதிகளுக்கு ரூ. 1427

இராசிபுரம் தொகுதிக்காக ரூ. 1200

ஆத்தூர் தொகுதிக்காக ரூ. 1373

சென்னிமலை தொகுதிக்காக ரூ. 1300


இது தவிர, கழக நிதியிலிருந்து ரூ 1880க்கு வாங்கப்பட்ட (எம். டி. என் 1055 எண்ணுள்ள) மோட்டார் வண்டி வேறு, ஆக மொத்தம் ரூபாய் 9180 போக, நாடெங்கும் தான் போய்த் தேர்தல் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்பதற்காக. போக்கு வரத்துக்காக வேண்டுமென்று தலைமைக் கழகத்திடம் ரூபாய் 1000, தனியாக பெற்றுக் கொண்டார். தோழர் சம்பத்! போன ஊர்களில் இவர் ரயில் செலவுக்குப்பணம் வாங்கிக் கொண்டது வேறு!! வேறு எந்தப் பிரச்சாரகரும், பெற்றதில்லை, இப்படிப் பேசப்போகச் செலவுக்கு ஆயிரம் கொடென்று!!

பதினுயிரம் ரூபாய் வரையில் கழகத்தின் பணம், இக்கண்ணியவானின் தேர்தலுக்காகச் செலவழிக்கப்பட்டது. இருந்தும், சொல்கிருர், என் சொந்தச் செல்வாக்கைக் கொண்டுதான் வென்றேன் என்று!— உண்மை தான்! அன்று வென்றேன், அதற்காக இன்று விலக வேண்டுமோ?— என்று கேட்டால் பார்பார், இந்த ஆளுக்கு நாணயத்தைவிடப் பதவிதான் பெரிதாகப் படுகிறது என்று நாடு பேசும் என்பதால், உங்களாலா ஜெயித்தேன்—என் செல்வாக்கால், என்று, நெஞ்சைக் கல்லாக்கிக்கொண்டு பேசுகிருர்!

ஒரு எம்.பி பதவி —இன்னும் எட்டுமாத வாழ்வு—தன் சுய கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள அதை இழக்கத்துணியாத இவர், தலைவராம்—இவரால் தான் தமிழகம்' தலை நிமிருமாம் — சுயநலமற்ற தியாகியாம்—இவர் தான், அரசியலுக்கே உண்டான அகராதியாம்!! எதைச் சொல்லி ஓட்டுக் கேட்டாரோ அதை விட்டுப் போன பின்னும் 'விடேன் பதவி'யை என்று வீண்வாதம் கிளப்பிடும் இவர்தான் சாதிக்கப்போகிருராம் மக்களுக்கு!!

கழகத்திற்குத் திருப்பிக் கொடுக்காமல், இவர் கொண்டு போன பணத்தைப் பற்றிக் கோவையில் கூறினராம்--''சுமார் 9500 ரூபாய் இருக்கும்'' என்று! இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்து கிட்டத்தட்ட ஓராண்டுக்கு மேலாகிறது—வரவேற்புக் கமிட்டித் தலைவருக்கு இன்னும் கணக்கு

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)



சி. பி. சி., அவர்கள் மயிலையில் பேசும் போழ்து, நொணுக்காய் தேர் செய்து விளையாடுவதாக 'சம்பத்' கட்சியை வருணித்தார்!

நொணுக்காய் — காங்கிரஸ்
குச்சிகள் — திராவிடர்கழகம்
கயிறு — பொய்ச்சரடு
கோஷம் — வன்செயல்

(கண்ணன்)
உஸ்மான் சாலை,
சென்னை-17

[சென்ற இதழ் தொடர்ச்சி]

குறுகிய தேசியம் வளர்த்து இவனை!



வன்னெஞ்சன் ஆக்கியது!!

# 60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

கார், ரிப்பேராக்யிருககிருன், ஈச்மேன்!—என்கிற செய்தி கிடைத்ததுதான் தாமதம், யூத ஒற்றர்கள் ஒவ்வொரு கார் தொழிற்சாலைகளையும் வட்டமிடலாயினர்- யார் போகின்றனர், யார் வருகின்றனர் என்று, கவனிக்கலாயினர். போனஸ் அயர்சியிலிருந்த மெர்சிடிஸ்-பென்ஸ் கார்த் தொழிற்சாலையிலிருந்து 'நீள்காதன்' ஒருவன் போவதைக் கண்டனர். ஈச்மென் நகரின் இன்னெரு பகுதியில் இருந்தான். அவனிருந்த வீடு அவனே கட்டிக் கொண்டதாம். அங்கே நவீன வசதிகள் எதுவும் கிடையாதாம். மின்சாரம் இல்லையாம். அதைப் பார்க்கும்பொழுது ஈச்மென், தான் செய்த குற்றங்களுக்குக் கழுவாய் போல அமைத்துக்கொண்ட காராக்கிரகம் போலிருந்தது, என்கிருர்கள். (முதல் பக்கம் பார்க்க) அந்த வீட்டில்தான் ஈச்மென், தன் மனைவி ப்ராவுடனும் மூன்று பிள்ளைகளுடனும் குடியிருந்தான். அவன் வீட்டிலிருந்து இரண்டு இடங்களில் பஸ ஏறித்தான், தொழிலகம் வந்தாக வேண்டும்.

இதையெல்லாம், நீள்காதனை ஈச்மென்னைப் பின்பற்றிச் சென்ற ஒற்றன் தெளிவாகத் தெரிந்து கொண்டான்.

இந்தச் செய்தி உடனே இரகசிய சமிக்ஞை எழுத்துக்கள் மூலம் இஸ்ரேலுக்குத் தெரிவிக்கப்பட்டது. பேகடேயும் மற்ருெருவரும், உடனே உதவிகள் அளிக்குமாறு கோரினர். அதேசமயம் "இவன்தானு ஈச்மென்" என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள, அவன் இருந்த இடத்தில்போய் இரகசியமாக விசாரித்தபொழுது ரிகார்டோ க்ளமெண்ட் என்கிற பெயர் மாருட்டத்துடன் அவன் இருந்ததாகத் தெரிய வந்தது. ஆஸ்திரியாவில் வசித்தபொழுது எடுக்கப்பட்ட ஈச்மென் மனைவியின் புகைப்படங்கள், யூத ஒற்றர்கள் வசமிருந்தன. அதைக்காட்டி, அக்கம் பக்கத்தில் விசாரிக்க, "ஓ! இவை சேனராக்ளமெண்ட்டின் படங்களாச்சே!!" என கிற பதில்கள் கிடைத்தன.

பிரான் ஆட்சியின் போது,பெரிய போலீஸ் அதிகாரியாக இருந்த ஒருவனுக்கு ஏராளமான லஞ்சம் கொடுத்து, உண்மையைக் கேட்டபோது, 'க்ளெமெண்ட் என்கிற பெயரிலிருப்பவன்தான், ஈச்மென்", எனும் உண்மையை அவன் உரைத்தான்.

இந்தத் தகவல்கள் இஸ்ரேலை எட்டியபோது, ஈச்மென்னை என்ன செயவது எனபது பற்றி இரண்டுவிதக்கருத்துக்கள் எழுந்தன. அவனைக் கண்ட இடத்திலேயே சுட்டுத்தள்ளவேண்டும் என்பது ஒரு சாரார் வாதம்! இல்லை, இஸ்ரேலுக்குக் கொண்டு வந்து நீதி விசாரணை செய்ய வேண்டும் என்பது இன்னெரு சாரார் வாதம்!! இப்படி இருவிதக கருத்துக்கள் எழுந்தாலும், ஈச்மெனை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றே, பெரும்பான்மையோர் கருதினர். ஆனுல், இது எப்படி முடியும்?—என்கிற சந்தேகமும இருந்தது. ஏனெனில் இன்னெரு நாட்டிலிருப்பவனை திடுதிப்பென்று இன்னெரு நாட்டுக்குக் கொண்டுவர முடியாது. அந்த நாட்டின் அனுமதி வேண்டும். அனுமதி கேட்டு அர்ஜென்டைன மறுத்தால், என்ன செய்வது? இதனுல் ஈச்மென்னை, அர்ஜென்டைனவிலிருந்து 'திருட்டுத்தனமாகத் தூக்கிவருவது", என்று முடிவு செய்தனர். அவன் என்ன பேனுவா! பென்சிலா! கள்ளக் கடத்தல் செய்வதற்கு. எப்படி இது இயலும், என்றும் யோசித்தனர்.

எதிர்பாராத விதமாக அர்ஜென்டைனக்காரர்களே, இதற்கான பதிலை அளித்தனர். மே மாதந் தோறும் நடைபெறும் சுதந்திர விழாவினையொட்டி, எந்த வெளிநாட்டுப் பிரயாணிகளும், எவ்வித தடையுமில்லாமல் விமானங்களில் வந்துபோகலாம் என்று வெளியிட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இஸ்ரேலியர்கள் ஒரு விமானத்தில் காத்திருப்பது, ஈச்மென்னைப் பிடித்ததும் காரிலேற்றி விமானத்துக்குக் கொண்டு வந்து விட்டுவிடவேண்டியது சவாரி, என்று திட்டம் போட்டனர்.

ரிகார்டோக்ளமெண்ட்—அடால்ப் ஈச்மென் பஸ்ஸில் ஏறி தனியாகச் செல்வதை சான்டோர்பேகடேயும், இன்னும் மூவரும் வழியில் காத்திருந்து கவனித்தனர், ஒரு காருடன். ஒருவேளை ஈச்மென்னைப் பிடித்து ஏற்றிய கார் பழுதாகிவிட்டால் உடனே அவனைத் தூக்கிக்கொண்டு போவதற்காகப் பலர் பல கார்களில், அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தனர். போனஸ் அயர்சுக்குப் பல மைல்களுக்கப்பால், விமானத்தில் ஏற்றப்படும் வரை ஈச்மென்னைப் பாதுகாப்பாக வைத்திருக்க, ஒரு வயல் வீட்டைத் தேர்ந்தெடுத்து, அங்கே வேறு பலர் காத்துக் கொண்டிருந்தனர்!!

1960, மே 12-ந் தேதி, ஈச்மெனைப் பிடிப்பது என்று நிர்ணயிக்கப்பட்டது.

ஆனுல் எதிர்பார்த்தபடி இஸ்ரேலிலிருந்து விமானம் வரவில்லை. எனினும் ஈச்மெனைப் பிடித்துவிடுவதென முடிவு செய்தனர். அன்றைய தினம், ஊரெங்கும் ஒரே மப்பும் மந்தாரமுமாகயிருந்தது! இதனுல் தெருக்களிலும் மக்கள் நடமாட்டம் அதிகமில்லாமலிருந்தது!!

மெரிசிடிஸ்—பென்ஸ் கம்பெனியின் கதவுகள் திறக்கப்பட்டன. தொழிலாளர்களுடன் ஈச்மென்னும் இருந்தான். 'க்யூ'வில நின்று பஸ் ஏறினுன். இஸ்ரேலிய ஒற்றனும் ஏறினுன். தன்னுடைய கணவன் வருகைக்காகக் காத்திருக்கிறவளைப் போல அங்கே நின்று கொண்டிருந்த இஸ்ரேலியப் பெண்ணெருத்தி, அருகேயிருந்த டெலிபோனுக்குச் சென்று, "வருகிறன் பஸ்ஸில்" என்று தகவல் கொடுத்தாள்.

இரண்டு கார்கள் பஸ்ஸைப் பின்தொடர்ந்தன. பிறகு நடந்ததைத்தான் சென்ற வாரமே படித்தீர்கள்!!

ஈச்மென், விழித்துப் பார்த்தபோது ஒரு வயற்காட்டில், தன்னைச் சுற்றிப் பத்துப்பனிரெண்டு பேர் நிற்க, கைதியாகக் கிடந்தான்.

"என்னைக் கொல்லாதீர்கள்! கொல்லாதீர்கள்!!" என்று அறுபது லட்சம் உயிர்களைக் கொன்ற அப்பாதகன், கூவினுன்.

"உன்னைக் கொல்லவில்லை! ஆனுல், மரியாதையோடு நீ எங்களோடு வரவேண்டும்" என்ருன் பேகடே.

ஈச்மென், எழுதிக்கொடுத்தான் என்னென்னவோ உளறினுன். அந்த உளறல்களைக்கூட ஒன்று விடாமல், இஸ்ரேலிய ஒற்றர்கள் 'டேப்ரிகார்டரில்' பதிவு செய்தனர்!

மே 19-ந் தேதி! அர்ஜண்டின சுதந்திர விழா, நடைபெற்றுக் கொண்டிருந்தது. விழாவைக் காண வந்தவர்களை ஏற்றிக் கொண்டு வந்தது போல, ஒரு இஸ்ரேலிய விமானம் வந்தது. நள்ளிரவில், அந்த விமானம் மீண்டும் புறப்பட்டது! மொத்தம் 19—பேர் இருந்தார்கள்—ஈச்மென்னும் இருந்தான்!! யாரும், ஐயப்படவோ,சோதனை செய்யவோ,இல்லை.

மே 23-ந் தேதி, இஸ்ரேலியத் தலைநகரமான டெல் அவிவில், நீதிமன்றத்தின் முன், நாஜிப் போர் குற்றவாளிகளில் ஒருவனுக நிறுத்தப்பட்டான். அவன்மீதுயூதர்களை இலட்சக்கணக்கில் கொன்றது! குழந்தைகளுள் பட பலரை இலட்சக் கணக்கில் கொன்றதன் மூலம் மனித நெறியைமறந்தது முதலிய குற்றங்கள்சுமத்தப்பட்டன. "நான் என்ன செய்தேன்? நானெருு இராணுவ வீரன். தலைவர்கள் இட்டக் கட்டளையை நிறைவேற்றினேன்" என்ருன் ஈச்மென்.

* * *

ஈச்மென், கொண்டுபோகப் பட்டுவிட்ட சேதி, இஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்த பிறகு தான், உலகுக்கும் அர்ஜண்டைனுவுக்கும் தெரிந்தது! உடனே அர்ஜன்டைன அரசு, அலறியது. சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் மீறிவிட்டதாக வெகுண்டெழுந்தது.

ஈச்மென் அகப்பட்டுவிட்ட செய்தி கேட்ட,அர்ஜன்டைனவில்

வாழ்ந்த நாஜிகள் பதறினர். ஈச்மென் மனைவி மக்களுக்கும் ஆபத்துவரக்கூடாதென்பதால், அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்குக்கார்களைக் கொண்டுபோய், உடனே அப்புறப்படுத்தினர்!!

அர்ஜன்டைனா, இஸ்ரேல் போக்குபற்றி வெகு கடுமையாகக் கண்டித்தது. இப்போது, ஆட்சியிலிருப்பது பிரான் என்கிற சர்வாதிகாரியல்ல. அவனை வீழ்த்தி எழுந்த புது அரசு. அந்த அரசின் தலைவருக்கு, இஸ்ரேலியப் பிரதமர் பென்குரியன், உருக்கமான ஒரு கடிதம் எழுதினார். "இவ்வளவு பெரிய அக்கிரமத்தைச் செய்த ஒருவனைத் தண்டிப்பதில், சட்ட வரம்புகள் தேவையா? என்பதை நீங்கள் யோசிக்கவேண்டும். இப்படி கொல்லப்பட்ட இலட்சக் கணக்கானவர்கள் உங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால், உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதை நீங்களே, எண்ணிப்பாருங்கள்!" என்று எழுதினார். அதே சமயம், இஸ்ரேலிய அரசு, சர்வதேச சட்டம் எதையும் தாங்கள் மீறவில்லையென்றும் வாதிட்டது. இன்னும் இப்பூசல், முடியவில்லை. எனினும், இஸ்ரேல், யோசிக்கவில்லை. ஈச்மென் மீது வழக்கு நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன! இந்த ஏற்பாடுகளைச் செய்து முடிக்கமட்டும் பத்து மாதங்கள் தேவைப்பட்டன!!

டெல் அவீவில், விசாரணை மன்றத்துக்காக நான்கு அடுக்கு மாடிகள் கொண்ட கட்டிடம் தேர்ந்தெடுக்கப் பட்டது. விசாரணையை ஏக சமயத்தில் நூற்றுக்கணக்கான பேர், பார்க்கலாம். இப்போது நடக்கும் இந்த விசாரணையைக் காண்பதற்காக மட்டும் வெளி நாடுகளிலிருந்து பதினாயிரம் பேர் வந்திருக்கிறார்களாம், இஸ்ரேலுக்குள். ஆனால் யூதர்கள் அதிகமாக யாரும் இங்கே அனுமதிக்கப்படுவதில்லை. இருபதே இருபது பேர் மட்டுமே, அதுவும், அடையாளச் சீட்டு மூலம் அனுமதிக்கப்படுவர்! ஏனெனில், ஈச்மென் மீதுள்ள ஆத்திரம், யூதர்களுக்குச் சாதாரணமானதல்லவே!! இதேபோல, ஈச்மென்னும் சாதாரண ஆளில்லையே. கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்தும்போது' திடீரெனப் பாய்ந்து, யாரிடமாவது இருக்கும் ரிவால்வாரை உருவிச் சுட்டுக்கொண்டு செத்துவிட்டால் என்ன செய்வது? தற்கொலை செய்துகொண்டானானால், எப்படிப் பழி தீர்க்க முடியும்! பட்டபாடு அதற்காக இல்லையே,! அதனாலும், அதே சமயம் அவன்மீது எந்த யூதருக்காவது தாங்கமுடியாத ஆத்திரம் வந்து ஏதாவது செய்துவிடாமலிருப்பதற்காகவும், நீதி மன்றத்தில் அவன் இருப்பதற்கான விசேடமான கூண்டு ஒன்று செய்தனர். அந்தக் கூண்டிலிருந்தபடி, அவன் எல்லோரையும் பார்க்கலாம். கண்ணாடிகளால் செய்யப்பட்ட அந்தக் கூண்டுக்குள், குண்டுகளோ, எதுவும் ஊடுருவ முடியாது. அதேசமயம் உள்ளேயிருக்கும் ஈச்மென், நீதிபதிகளிடமோ அல்லது அவன் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர்களிடமோ ஏதாவது சொல்ல விரும்பினால், கூண்டுக்குள் இரண்டு மூன்று பித்தான்கள் பொறுத்தப்பட்டு, அவைகளை அழுத்தி அதன் மூலம் பேசும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன!

ஒவ்வொரு நாள் வழக்கு முடிந்ததும், அவனுக்காக நிறுவப்பட்ட ஒரு சிறைக்குள் கொண்டுபோய் பூட்டப்படுவான்!! அந்தச் சிறைக்குள் அவன் தற்கொலை ஏதும் செய்துகொள்ளாமலிருக்க வேண்டுமே? அதற்கான சகல பாதுகாப்புகளும் செய்யப்பட்டன. மின்சார விளக்கு வெளியே தெரியும்படியிருந்தால், அதைப்பிடித்திழுத்து அவன் செத்துவிட்டால், என்ன செய்வது. அதனால், சுவற்றுக்குள்ளே, விளக்கு வைக்கப்பட்டது. தன் இனமக்களைக் கொன்று குவித்த அப்பாதகனைப் பத்திரமாகப் பாதுகாகக வேண்டியதாயிற்று, இஸ்ரேல்! அவனைச் சாதாரணமாகச் சாகவிடவா, அவர்கள், பதினைந்து ஆண்டுகாலமும் படாதபாடுபட்டனர்!! ஈச்மென்னுக்கு, படிப்பதற்கு வேண்டிய சகல நூல்களும் தரப்பட்டன. அவன், நாஜிச வரலாற்றையும் ஆஸ்டிரிய மொழியில் எழுதப்பட்ட நாவல்களையும் விரும்பிப் படிப்பானாம், ஒவ்வொரு நாவலையும் படித்துவிட்டு மனமுருக அழுவானாம்—ஒருநாள் எனக்கு இனிமேல் நாவல்களே வேண்டாம்! அவை என்னை உருக்கிவிடுகின்றன!! என்று ஓவென்று கதறினானாம்!!

* * *

நாவல்களைப் படித்தாலே, மனமுருகக் கூடிய இதயம் படைத்த இவன், இவ்வளவு பெரிய கொடுமைக்காரனாக எப்படியானான், எனும்போதுதான் யூதர்கள் மாட்டு ஜெர்மானியருக்கு உண்டான, 'துவேஷத்தின்' அளவும் வலிவும் புரியும்! ஆஸ்டிரியாவில் ஒரு என்சினியரின் பிள்ளை, இவன். சிறுவயதில் இவனைப் பார்த்தால், யூதனைப்போலிருக்குமாம். 'ஏ! யூதா! யூதா!!' என்று சகதோழர்கள் இவனைக் கேலி செய்வார்களாம். இதனால், யூதர்களைக் கண்டாலே இவனுக்கு ஒரு வெறுப்பு வளர்ந்ததோடு தன் பள்ளித் தோழர்களை அழைத்துக் கொண்டு எங்கெங்கு யூதப் பிள்ளைகள் தென்பட்டாலும், அடித்து நொறுக்குவானாம். இப்படிப்பட்டவன், ஹிட்லரின் வலது கையாக ஆனதில் வியப்பென்ன! ஆஸ்திரியாவில் முதன் முதலில், இவன் ஒரு பெட்ரோல் கம்பெனியில்தான் வேலையிலிருந்திருக்கிறான். பிறகுதான் ஜெர்மனி சென்று, 'யூதர்களை ஒழிக்கும்' பிரச்னைக்கு உயிரளித்து, திட்டங்கள் தந்து செயல்படுத்தினான்.

இவனுடைய தலைமையில், நடந்த கொடுமைகளைப் பற்றி முன்பே படித்திருப்பீர்கள்—அவைகளைப் பற்றி விளக்கவே, இந்த வாரத்திய இதழின் முதல் பக்கத்தில் சில படங்கள் தரப்பட்டுள்ளன- அவைகளைப் பார்க்கும் போதே, உங்களுக்குமனம் 'பகீர்' என்கும். இந்தக் கட்டுரையை எழுதும் ஒவ்வொரு தடவையும், நான் கண்ணீர் வடிக்கிறேன். இதுசம்பந்தமான ஏடுகளைப் படித்தபோது, என்னையறியாமலே, நான் தேம்பித் தேம்பி அழுதேன். ஒருவரா! இருவரா!! அறுபது லட்சம் உயிர்கள்—அவர்களில் அழகுமாதர்கள், குழந்தைச் சிட்டுகள்—அத்தனை பேரையும் எப்படியெப்படிக் கொன்றார்களாம், தெரியுமா. போர் முடிந்ததும், இரண்டாவது உலகப் போருக்குக் காரணமான நாஜித் தலைவர்கள், நியுரம்பர்க் எனுமிடத்தில், நேசநாடுகளால் விசாரணை மன்றம் ஒன்று ஏற்படுத்தி விசாரிக்கப்பட்டனர். அப்போது யூதர்களைக் கொன்று குவித்தது பற்றி பல தகவல்கள் வெளியாயின. அந்த விசாரணையின் முடிவில் அந்த நாஜித் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். அந்த விசாரணையின்போது, ஈச்மென் பெயரே மிகவும் அடிபட்டது.

படித்தபோதும், எழுதுகின்றபோதும், நான் கண்ணீர் வடிக்கும் இந்த பயங்கரப் படுகொலையைப்பற்றி, விசாரணையின்போது கிடைத்த, தகவல்களில் சிலவற்றை இங்கே தருகிறேன்:

இவ்வளவு கொடுமைகளும் ஏற்படக்காரணம் ஹிட்லர் உண்டாக்கிய குறுகிய தேசியம் எது, வெறிபிடித்த தேசியம் எது, ஹிட்லர் ஏன் இந்தக் கொடுமைகளைப் புரிந்தான் என்பதையும் அடுத்து வரும் இதழில் விளக்கி, இந்தச் சோக வரலாற்றை முடிக்கலாமென இருக்கிறேன்.

"அறப்போர்" இதழைப் படிக்கும் என்னருமைச் சகோதரர்களே! ஏட்டின் மூலம் உங்களை மகிழ்வித்து, நானும் மகிழ்ச்சியடைய விரும்பினாலும், எப்படியெப்படிப் பயங்கரவாதிகள் அரசியலின் பெயரால் எழும்பி, செல்வாக்கைப்பெற்று, அச்செல்வாக்கின் மூலம் குறுகிய தேசீயப் பற்று கொண்டு கோர ஆட்டம் போட்டார்கள் என்பதையும், அந்தத்துவேஷத்தின் விளைவால் ஏற்பட்ட பயங்கரத்தையும், தோழர் சம்பத் தவறான தேசீயம் பேசிடும் இந்த நேரத்தில், விளக்க வேண்டுமென்றே, இந்த கொடுங்கோலனின் காதையைத்தருகின்றேன். கொட்டுவதற்குக் கண்களில் நீரைத் தேக்கிக்கொண்டு, கொடுமைகளைப் படியுங்கள்:

* * *

ஒவ்வொரு தினமும், எப்படியெப்படி யூதக்கைதிகளைக் கொல்வோம் என்பது பற்றி நியுநம்பர்க் விசாரணையின் போது ஒட்டோஒலன்டார்ப் என்பான் கூறியது:

வக்கில்: உன்னுடைய பொறுப்பிலிருந்த சாவுகிடங்கில் மட்டும் எத்தனை யூதர்களைத் தீர்த்துக் கட்டினீர்கள்?

ஒட்டே: 1941 ஜனவரியிலிருந்து 1942 வரை என் கிடங்கில் மட்டும் 90,000 பேரை......

வக்: பெண்களும் குழந்தைகளும் உண்டா?

ஒட்: உண்டு!

வக்: இவர்களைக் கொல்லும் போது நீர் நேரில் இருப்பீரா....

ஒட்: இருப்பேன்!

வக்: ஆமாம்! இந்த யூதர்களை எப்படி நீங்கள் சாவுக்கிடங்குக்கு அழைத்து வருவீர்கள்...

ஒட்: யூதர்களை ஒழிப்பது என்கிற திட்டம் இரகசியமாகத்தயாரிக்கப்பட்டது. எனவே, நாங்கள் யாரிடமும் சொல்லமாட்டோம். ஜெர்மனியிலும், ஆஸ்திரேலியாவிலும், போலந்திலும் இப்படி ஐரோப்பாவில் எங்கெங்கு யூதர்கள் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் கொன்று—ஒழிக்க வேண்டும் என்றே ஈச்மென், "ஒரே வழி" எனும் திட்டம்கண்டார். இதை ஹிட்லரும் ஒப்பினார். யூதர்களை வேறு ஊருக்கு வெளியேற்றப் போவதாகச் சொல்லி அழைத்துவருவார்கள்......

வக்: எப்படி?

பதில்: பெரியலாரிகளிலும், ஜீப்களிலும்... ...வந்ததும், நாங்கள் சோதனையிடுவோம். அவர்களிடமிருந்த சொத்துக்களையெல்லாம் பிடுங்குவோம்......

வக்: அவைகளை என்ன செய்வீர்கள்?

பதி: எங்கள் அரசாங்கத்துக்கு அனுப்பி விடுவோம்......பிறகு, யூதர்களை, எங்கே மரண தண்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

## கவிஞரே! நின்னையும் மன்னிப்பார்!

அண்ணனின் பின்னே செல்லும்
அருந்தமிழ்ப் புலவர் கூட்டம்
திண்ணமாய் இந்நேரத்தில்
திரையினும் மிகவேயாகும்
எண்ணமே பழுதாய்ப்போன
நின்னையும் எனது அண்ணன்
கண்ணியன் மன்னிப்பார்!

—கவிஞர் கண்ணதாசன்.

*...*...*

அனுப்பியவர்: செகநாதன், தாரமங்கலம், சேலம்

# வயிற்றெரிச்சல்கொண்ட சம்பத்!

## கழகத்தை அழிக்க 'காலம்' பார்த்திருந்தார்.

## சுயநலமேதவிர பொதுநலமில்லை !!

ஒரு இடத்துக்கு முதலில் சம்பத்தும், பிறகு எம். ஜி. ஆரும் போனால், சம்பத்தைவிட எம்.ஜி. ஆரை எல்லோருமே மொய்த்துக் கொண்டு விடுகிறார்கள்--சம்பத் இருக்குமிடத்தில் ஆட்களே இருப்பதில்லை.

இம்மாதிரி பல சம்பவங்கள்—சம்பத்தும், எம். ஜி. ஆரும் ஒரே இடத்திற்குப் போனால், சம்பத்தைக் காயவைக்கும் விதத்தில் ஏற்பட்டுள்ளன.

இந்த காய்ச்சல் அதாவது எம், ஜி. ஆருக்குள்ள செல்வாக்கு, கட்சிக்குள், நமக்கு இல்லையே என்ற ஏக்கம் தான் எரிச்சலாக மாறி, எம். ஜி. ஆர். மீது ஏற்பட்ட ஆத்திரம், திரு. சம்பத்தை கொள்கை வேறுபாடு என்ற போலிக்காரணத்தை முன்னே அனுப்பிவிட்டு, பின்னே அவரை வெளியேற்றி இருக்கிறது என்று பொதுவாக எல்லா வட்டாரத்திலுமே பேசப்படுகிறது. இதில் மெய்-பொய்யின் கனத்துக்கு எடை சொல்ல முடியாது. ஆனால் சம்பத் ஆத்திரத்துக்கு சினிமா நடிகர்களின் செல்வாக்கு தி, மு, கவில் மேலேறிவிட்டது தான் என்பதை அவரோ' எவரோ, மறுக்க முடியாது.

இதில் திரு. சம்பத் ஆத்திரப்பட என்ன இருக்கிறது? கட்சியிலேயே பெருந்தலைவரான ஒருவர் மற்றொரு சக தலைவரும் நடிகருமான ஒருவருக்கு அதிக அப்ளாஸ் கிடைக்கிற ஒரே காரணத்துக்காக ஆத்திரப்படலாமா? என்பதை மட்டுமே நாம் துருவ விரும்புகிறோம்--துருவித் தீரவும் வேண்டும்-எதிர் முகாமிகள்!

பொதுவாக எந்த ஒரு தலைவனுக்கும் தனது கட்சிக்குள், தனக்குள்ள சக்தி-செல்வாக்கின் மீது தன்னம்பிக்கை இருக்க வேண்டும் தன் கட்சியைச்சார்ந்த மற்றொருவருக்கு, தன்னைவிட செல்வாக்குக் கூடினாலும், தனக்குள்ள செல்வாக்கு குறையாமலிருக்கிறதா என்பதிலேயேதான் கவனமாக இருக்க வேண்டும்-குறையவிடாமற்கண்காணித்தும் கொள்ள வேண்டும், அதன்றி தன்னை விட மற்றொருவருக்கு கட்சிக்குள்ளேயே செல்வாக்கு அதிகரிக்கிறது என்பதில் அசூசையோ ஆத்திரமோ காண்டால், தன் சக்தி மீதே அவர் நம்பிக்கை இழநதுவிட்டதாகத் தான் பொருள்! தன்மீது நம்பிக்கையுள்ள எவரும், பிறர் செல்வாக்கு அதிகரிப்பதில் அகங்கரிக்கவும் மாட்டார்கள்—— ஆத்திரப்படவும் மாட்டார்கள்—பட்டால், அந்த நபர் ஒரு அபேதத் தலைவன் என்ற அந்தஸ்துக்கு தன்னை இன்னம் தயாரித்துக் கொள்ளவில்லை என்பதுதான் நெறியான அரசியலுக்கு அர்த்தம்.

எம். ஜி, ராமச்சந்திரன் ஒரு நடிகராகத்தான் தமிழ்நாட்டில் அடி வைத்தார். ஆனால் இன்று அவர் ஒரு நடிகர் அல்லது சம்பத் கருத்துப்படி கலைஞர் என்பதைவிட, அவர் ஒரு தி. மு. க, தலைவர் என்பதில்த்தான் அதிக அர்த்தமிருக்கிறது. உண்மையிலேயே, எம். ஜி, ராமச்சந்திரனாகவே அவர் நிலைத்திருந்தால், அவருடைய நடிப்புக்கு ஈடாக இதுவரை எவருமேஉயர்ந்திருக்க முடியாது-அவருடைய புகழும் போக்குமே எதிர்ப்பற்ற ஒரு தனி நிலையை எய்திருக்கும். 'பாவம்! அவருக்கு தி. மு. க. கொள்கை மீதோ அன்றி அதன் தலைவர்களில் ஒருவர் மீதோ ஏற் பட்ட அலாதிப் பாசமோ என்னவோ, எம். ஜி. ராமச்சந்திரனிலிருந்து எம். ஜி. ஆராக கட்சி ரீதியில் மாறினார்--மாறியதிலிருந்து அவர் நடிப்பில், பேச்சில், போக்கில் கட்சித் தழுப்பு விழுந்து பலமாக விம சனத்துக்கு இலக்காகிவிட்டார் என்பதை இருதரப்புமற்ற நாமும் நம்மைப் போன்ற பலரும் உணராமலில்லை.

நிஜமாகவே எம். ஜி. ஆரை எடுத்துக் கொண்டால், தி. மு.க.

### "கண்ணகி"

தொடர்பால் நஷ்டம் அவர் சொந்தத்துக்குத் தான்! அவருடைய நஷ்டம் தி. மு. க. வுக்கு லாபம் என்பதை எவரும் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஒரு கட்சிக்காக ஒரு நடிகர், சொந்தப்பயன் பெருகுவதைக் குறைத்துக் கொண்டார் என்றால் உண்மையில் கட்சி மீது நம்பிக்கையுள்ள ஒரு முக்கியத் தலைவர் சந்தோஷப்பட்டு சபாஷ் கொடுப்பதா?சங்கடப்பட்டுத்தூற்றுவதா? இதில் எது மனித நாகரீகம்? நேயர்களே யூகித்துக் கொள்ள வேண்டியதுதான்,

அவ்வாறு சந்தோஷப்படுவதற்குப் பதிலாக சங்கடப்படுகிறார் ஒரு தலைவர் எனறால், அவர் அக்கட்சியை ஒரு தற்காலிகத் தங்குமடமாக-அல்லது அதன் வளர்ச்சியை சமயம் பார்த்துச் சரிதது விடும் ஒரு எதிரியாக இதுவரை இருந்திருக்கிறார் என்றுதானே கருதவேண்டும்—?

இது தவிர,

எம். ஜி. ஆருக்கும் இதரநடிகர், கலைஞர்களுக்கு தி. மு. க, வில் அதிக ஆதிக்கம் இருக்கிறது என்று, தி. மு. க. வக்கே ஆதிகர்த்தாவான சம்பத் சங்கடப்படுவது நமக்குச் சங்கடமாக இருக்கிறது.

நடிகர்-கலைஞர்களுக்கு உள்ள செல்வாக்கும், கட்சித்தலைவர்களுக்கு உள்ள செல்வாக்கும், வெவ்வேறு மாதிரியைக் கொண்டவை. என்னதான் ஒரு கலைஞனுக்கு-நடிகனுக்கு அப்ளாசும் ஆரவாரமும் அதிகமிருந்தாலும், அக்கட்சியிலுள்ள முக்கியத் தலைவனுக்குரிய செல்வாக்கின் சக்திக்கு அழுத்தம் அதிகமிருக்கும். ஒரு தலைவனின் மேம்பாடடை, அத்தலைவனின்கீழ்இயங்கும்கட்சியில் உள்ள ஒருகலைஞனின் புகழ், கீழ்ப்படுத்திவிடும் என்று எந்த அரசியல்வாதியும் கருதமாட்டான் கருதக்கூடாது.

பத்து மந்திரிகள் ஒன்று சேர்ந்து பேசினார்கள் என்றாலும் அங்கு கூட்டம் கூடுவதில்லை-ஒரு புது சினிமாப்படம் திரையிடப்படுகிறது என்றால் அங்குதான் கூட்டமெல்லாம் குவிகின்றன! இதில் ஆத்திரப்பட்ட மந்திரிகள், சினிமாக் கொட்டகைகளை யெல்லாம் அடைத்துவிட உத்திரவிடலாமா? இட்டால் அவர் மந்திரி வேலைக்கு லாயக்கா?

அவர் நடிகராகவும் கலைஞராகவும் மட்டுமின்றி தி. மு. க. தலைவராகவும் உயர்ந்து விட்டார் என்றால், அந்த அளவுக்கு அவர் தனது தேவையை-அபிமானத்தை கட்சிக்கு உதவியிருக்கிறார் என்பதுதானே பொருள்? கட்சிக்குள் எம். ஜி, ஆருக்கு ஏகப்பட்ட செல்வாக்கு ஏறிவிட்ட நிலையிலும் கூட, கட்சி நடவடிக்கை-கொள்கை- தலைமை-சமபந்தப்பட்ட மட்டில் இதுவரை சம்பத்துக்குள்ள பெருமையையும், தலைமையையும் எம்.ஜி.ஆர். மேவிக்கொண்டு மேலேறி விட்டதாகத் தெரியவில்லை. கட்சி சம்பந்தமான நடவடிக்கைகளிலும் சம்பத்துக்குள்ள தனித்வத்தில் இம்மியும் குறைந்த தாகவோ இதர தலைவர்கள் குறைத்துவிட்டதாகவோ, தெரியவில்லை, கட்சியில் சம்பத் வகித்த தலைமைக்கு ஈடாகக்கூட இயங்கியதாகத் தெரியவில்லை-எம்.ஜி. ஆர்! கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்களில் திரு. அண்ணாதுரை சம்பத்தின்ஆலோசனைக்கு அணுகுகிறமாதிரி எம். ஜி.ஆரை அணுகி இருக்க முடியுமா?

எம். ஜி. ஆருக்கு அதிகச் செல்வாக்கு என்பதெல்லாம் அவரிடம் இரட்டைச் சிறப்பு இருப்பதாலேயன்றி வேறலல. இன்னம் வடிகட்டிச் சொன்னால் திரு. சம்பத் உள்பட தி. மு. க. தலைவர்கள் கட்சியின் வெற்றிக்காகத் தயாரிக்கும் திட்டம்-செயல்பாடுகளை பொருளாதார ரீதியில் நிறைவேற்றிக் கொடுக்கும் ஒரு கறவையாகவும் உபயோகமாகி இருக்கிறார் எம். ஜி. ஆர்!

இப்படி ஒரு நபர் வாய்ப்பதற்கு இந்தியாவின் ஆளுங்கட்சி தவமிருக்கிறது——ஆனால் சம்பத் பொறுமுகிறார்! இந்தப் பொறுமலில் உள்ள அந்தரங்கம் தான், சம்பத், யார்? என்பதற்கு ஒரு 'அகராதி' ஸ்தானம் வகிக்கிறது.

சினிமா நடிகர்களையும், கலைஞர்களையும் ஒதுக்கிவிட்டு, தி. மு. கவில் உள்ள எல்லாத் தலைவர்களுக்கும் கட்சியில் உள்ள செல்வாக்கை, திரு. சம்பத் அவர்களோடு ஒப்பிட்டால் உண்மையில் இதரஎவரையும்விட சம்பத்துக்குள்ள செல்வாக்குதான் அதிகம் என்பதை அறிகிறோம். சில சந்தர்ப்பங்களில், திரு. அண்ணாதுரையைவிட சம்பத்துக்கு அதிகச் செல்வாக்கு ஏறி இருக்கிறது! இதை சம்பத்தின் மனசாட்சி உணராதிருக்க முடியாது.

இதர எவருக்கும் இல்லாத மதிப்பு, சம்பத்துக்கு கட்சிக்குள் இருக்கிறதே என்பதற்காக அவர்கள் சம்பத்தைக் காய்ந்தார்களா?

இதை ஆராய்கிறபோது, அந்தத் தலைவர்களிற் பலர், சம்பத்தைவிட படிப்பிலும், அநுபவத்திலும், கொள்கைப் பிடிப்பிலும், கட்சிச் சேவையிலும் மேம்பட்டவர்கள்.

குறிப்பாக திரு நெடுஞ்செழியனை எடுத்துக் கொள்வோம்.

அவர் ஒரு எம். ஏ. பட்டதாரி. தனிப்பட்ட முறையில் சேவை, திறமை, பற்று என்ற அடிப்படையில் சம்பத்தைவிட நெடுஞ்செழியன் எல்லா வகையிலுமே உயர்ந்தவர்-ஆனால் ஈ. வெ. ரா. வின் அண்ணன் மகன் மட்டும் அல்ல அவர்!

ஆனால் இந்தநெடுஞ்செழியனை விட, சம்பத்துக்கு கட்சியில் அதிகச் செல்வாக்கு உண்டு! இதற்காக நாயக்கரின் அண்ணன் மகனை கட்சியைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்று நெடுஞ்செழியனோ, அன்பழகனோ உண்ணாவிரதம் இருந்தார்களா? நல்ல சமயத்தில்-பொது எதிரியோடு களத்தில் இறங்கும் நேரத்தில் இடது சாரி முகாமுக்கே துரோகம் செய்துவிட்டு, பொது எதிரி முகாமின் கிளையாக ஒரு கட்சியை வைக்க வெளியேறி

(8 -ம் பக்கம் காண்க)

# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 2-6-61 கதிர் - 13

## வாழுமா!

அங்கே இவ்வளவு ரூபாய் தேர்தல் நிதி—இங்கே இவ்வளவு தரப்பட்டது—அந்த வட்டத்தில் இவ்வளவு புதுக் கழகங்கள்—இந்த மாவட்டத்தில், இந்தக்கிழமை இத்தனைபேர் உறுப்பினரானுர்கள், என்கின்ற சேதிகளை, 'நம் நாடு'ம் 'முரசொலி' யும் தரும்போது, சிந்தை களிக்கிறோம்! தெம்மாங்கு பாடுகிறோம்!! உண்மையில் இத்தகைய ஆக்கப் பணியே, ஓநாய்களுக்கும், உறுமும் கும்பலுக்கும் பதிலாக அமையுமே ஒழிய, வீண்பேச்சும் விவாதமும் கவைக்குதவமாட்டா.

சுற்றுப்பயணம் முடித்துவந்த நாவலரையும், சகோதரர் மு. கவையும் பார்த்தாலே, போதும்! அவர்தம் முகங்களிலே தோன்றும் ஆர்வமே நமக்குச் செந்தேனுக இனிக்கிறது. சென்ற கிழமை, புதுக் கட்சித் தோழர் சம்பத், சென்ற பல இடங்களுக்கு, மூன்று திங்களுக்கு முன்பு கொடுத்த தேதிகள்படி, நாவலர் சென்று வந்திருக்கிறுர். புதுக் கட்சியைப்பற்றி, சந்தித்தோரும்; மக்களும் காட்டிடும் மனநிலையை அவர் சொன்னுர்:

உண்மையில், களங்கமற்ற கொள்கை பிரகாசிக்குமே ஒழிய, 'அண்ணுதுரை' என்றழைத்து அப்பாவிடம் சபாஷ் பெறுவேன் என்பதற்காகக் கட்சித் துவக்கினுல், மக்கள் கைகொட்டிச் சிரியாமல்; "கண்ணியவானே! கமலமலர் முகத்தானே! உனையன்றி. யாருண்டு? நீயே, எம் தலைவன்" என்று போற்றுவர்!!

ம. பொ. சியின் ஒத்துழைப்பு—ஆதித்தனுரின் அரவணைப்பு, என்றெல்லாம் புதுக் கட்சித் துவக்கப்பட்டதும், சேதிகள் வந்தன. "என்னப்பா உன் கொள்கை! உடனே, சொல்!" என்கிருர், ம. பொ. சி. "ஒதவாது உன் பேச்சு. நான் கேட்பது தனித்தமிழ்நாடு. நீ கேட்பது அதில்லையே," என்று எழுதுகிறது, ஆதித்தனின் ஏடு, தினத்தந்தி.

இன்னும் நாளாக ஆக; புது உறவு பெற்றுவிட்டதாகப் பூரித்ததெல்லாம் நீரிற் குமிழியாகவே செய்யும்! ஏனெனில், இரு தமிழ் வீரர்களும், புது 'வீரரின்' தலைமையிலா இயங்குவர்? அவர்களைத் தலைவர்களென ஏற்றுக்கொள்ள ஒப்புமா, சம்பத்து மனம்! இவர் ஏற்காத போது, அவர் ஏற்பரோ!!—அந்த அறிகுறி இப்போதே தெரிகிறது,

இரு கிழமைகளுக்கு முன்பு தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் புதுக் கட்சியின் போக்குக்கண்டு, மீண்டும் வந்துவிட்டார்! அவரைப்போல, சம்பத்தின் போக்குப் புரியபுரிய, பலர் வரவே செய்வர், ஏனெனில் சம்பத்துக்குத் தமிழ் நாட்டிலும் அக்கரை கிடையாது—மொழியின்பாலும் ஆர்வம் கிடையாது—அவரது அக்கரையெல்லாம், எம். பி. பதவி முடிவதற்குள் தானொரு கட்சித் தலைவன் என்று சொல்லி, அதன்மூலம் வடக்கிலும் தெற்கிலுமுள்ள அதிருப்தியாளர்களுடன் தொடர்புகொண்டு ஒரு ஆட்டம் ஆடிப்பார்க்க வேண்டும் என்பதுதான்! மராட்டியம்—வங்கம்—என்று பேசுவது, இதனுல்தான்!

பாவம், மராட்டியமும் வங்கமும் இவர் போய்ச் சொல்லித்தான் தேசிய உணர்ச்சிப் பெறவேண்டுமென்றில்லை—இவரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் நிலையிலும் இல்லை—என்ருலும், இங்குள்ளோருக்கு ஒரு பிரமிப்பை உண்டாக்க, சித்துவிளையாட்டுகளைச் செய்கிருர்! செய்திகளையும் பரப்புகிருர்—எம். பி. என்கிற காரணத்தால்!!

ஆரம்பத்தில் அவர்கள் அப்படி நினைக்கவேண்டும், இப்படி நினைக்க வேண்டும், என்று, ஆட்டம்போடுவது இயற்கை. ஆனுல், பொதுவாழ்வு வெறும் ஆட்டத்தால் சிறந்துவிடாது. அதனைச் செம்மைப்படுத்த, கொள்கைகளைச் சொல்ல, பாடுபட நல்லவர்களும், வல்லவர்களும் வேண்டும். சம்பத்திடம், மாதம் இரண்டுக்கு மேலாகியும் தெளிவான கொள்கையில்லை! புதிதாகச் சேர்ந்த வல்லவரும் நல்லவரும், யாரும் தென்படவில்லை—உறுப்பினரில்லாத, ஆதரவாளர் என்கிற கவிஞர் கண்ணதாசனைத் தவிர, யாரும் தென்படவுமில்லை! இதுவா, வாழப் போகிறது!!

—0—

## சலசலப்பு ஜானகி

## தொடர் கதை-2

அண்ணல்

பாரதமாதா பாலகானசபா வின் பிரதமகதாநாயகி அருணுதான்! சமீபத்தில் தான், எங்களூருக்கு, அந்த நாடகசபையினர் வந்திருந்தார்கள். பெயரைப் பார்த்தால், 'பாரதமாதா' என்றிருக்கிறதே, நாடகக் கம்பெனியின் முதலாளி, ஆகஸ்டுப்போரில் சிறை சென்றவரோ, தண்டவாளம் பெயர்த்தவரோ, தடியடி பெற்றவரோ, என்று எண்ணுதீர்கள். இதெல்லாம் பாவம், அவருக்குத் தெரியாது. அவருக்கு மிகவும் வேண்டிய நண்பர், பண்டிதர் பரமு அவர், சில கதைகளை எழுதி, நாடகம்போடஆள் தேடிக்கடைசியில் நல்ல வருமானம் வரும் என்று சொல்லிப் பிடித்தார் ஒருவரை. இலாபத்துக்கு ஆசைப்பட்டு நாடகக் கம்பெனி வைத்தார், நல்ல முத்துவும். ஒவ்வொரு ஊரிலும், பலத்த நஷ்டம். ஆனுல் என்ன! இந்த ஊரில்லாவிட்டால் அடுத்த ஊர்!!—என்று, நஷ்டத்தை ஈடுகட்ட ஒவ்வொரு ஊராக, பண்டிதர் பரமுவுடன், நல்ல முத்துவும் போக வேண்டியதாயிற்று. நாடகக் கம்பெனிக்குப் பெயர் வைத்தது, நடிகர்களைத் தேர்ந்தெடுத்தது, எல்லாம் பண்டித்ர்தான்! 'பண்டிதர்' என்பதைவிட, 'பண்டிட்' என்று சொல்லுவதே விளம்பரமான பெயர் என்பதால் பண்டிட் ஜவகர்லால், பண்டிட் விசயலட்சுமி என்பதுபோல் பண்டிட் பரமு என்று நாடக நோட்டீசுகளில் போட்டுக் கொள்வார். உடைகூட, 'பண்டிட் மாடலில்' தான் இருக்கும். "பண்டிட் சார்! உங்கள் நாடகங்களுக்குக் கூட்டம் வரவேண்டுமென்ருல். நீங்கள் முக்கியமாக எம். ஆர். ராதா போலச் செய்ய வேண்டும், சார். வசனங்களில் 'பாலிடிக்ஸ்' கலந்து பேசும்படிச் சொல்ல வேண்டும். அதுவும், லோகல் பாலிடிக்ஸ்—அதாவது, உள்ளூர் விவகாரங்களை நன்ருக விசாரித்தறிந்து கொண்டு — உப்புரத்னமய்யர் ஓட்டல் போண்டா போல ஒப்பியிருக்கிருயே நீ, கருவாட்டுக்கடை கருமுத்துக்கும் உனக்கும் என்ன உறவா? இப்படி ஒட்டிப்போயிருக்கிருயே, ஆகா! எனக்கு ஆனந்தம் அகமது மீரான் கடை சாயாவைப் போல் 'ஸ்டிராங்காக' வருகிறது — இப்படியெல்லாம் பேச வேண்டும். அப்போதுதான், நாடகத்தைப் பற்றிப்பலரும் பேசுவார்கள். வருவார்கள்", என்று யாரோ, ஒருவர், யோசனை சொன்னுர் அதனுல், எந்த ஊருக்குப் போனுலும், முதலில் பண்டிட், அந்த ஊரைப்பற்றி விசாரிப்பார்—அப்படி விசாரித்த போது, கமலா ஜானகி கதையை யாரோ சொல்லியிருக்கிருர்கள். கமலா போட்ட துண்டறிக்கையும், அவர்கள் ஏன் இப்படிச் செய்கிருர்கள் என்பதற்கான நோக்கத்தையும் விளக்கியிருக்கிருர்கள்.

பண்டிட், 'டயலாக்' எழுதுமுன காமெடியன் கண்ருவியை, இரகசியமாகக் கலப்பார்! கண்ருவியும், 'ஐடியாக்களை' உதிர்த்து விடுவான்!! அவனிடம் தான் கேட்ட விபரங்களைச் சொல்ல, "பண்டிட் சார்! நாம்ப ஒரு வேடிக்கை செய்வோம்..." என்று இரகசியமாகத் தன்னுடைய திட்டம் ஒன்றைச் சொன்னுன். "ஆகா! எவ்வளவு பெரிய ஐடியா!! கண்ருவி. ரொம்ப நல்ல ஐடியா. இதை வைத்தே ஒரு ஸ்டோரி பின்னலாம். நீ சொன்னபடியே செய்வோம். பொழுதும் போகும்" என்று முடிவுக்கு வந்தார். இந்த முடிவை, நாடகசபையின் மற்ற நடிகர்களும் ஒப்பினுர்கள். ஒப்பாவிட்டால், தங்களுக்கு நல்ல 'பாத்திரம்' தரமாட்டார், பண்டிட், என்கிற பயம்! அந்த முடிவின்விளைவாகத்தான், ஜானகிக்கு, அருணுவிடமிருந்து கடிதம் வந்தது. அதனுல்தான், தன்னைச் சந்திக்கவோ, நேரில் பார்க்கவோ முயற்சிக்க வேண்டாம் என்றும் ஜானகிக்கு அருணு எழுதியிருந்தான். பார்வை பட்டு மலர்ந்த காதலையெண்ணிப்பாகாய் உருகினுன் ஜானகி! கடிதம் கண்டபோது சிரித்துமகிழ்ந்தனர் பாரதமாதா நடிகர்கள்!! அருணுவை வர்ணித்து, கற்பனைக் கமலா எழுதியிருந்த ஒவ்வொரு வாக்கியங்களையும், பண்டிட் மனப்பாடம் செய்து கொண்டார், அடுத்த கதைக்கு வசனம் எழுதும் போது, பயன் படுத்திக் கொள்ளலாமென்று! அதே சமயம், "சரி ஸ்டோரி சார்! இப்ப இந்தக் கடிதத்துக்கு என்னபதில் எழுதுவது. உன்னை வந்து எப்படியும் பார்த்து, திருமணத்துக்குச் சம்மதம் வாங்கினுலொழிய தரிக்காது தங்கமே என் உயிர்! நண்பர்கள் தடுத்தாலும், நாடே எதிர்த்தாலும் நாரிமணியே நீயே என் நாயகி! உன்னை நான் மணப்பேன். உன் அதரத்தை இழுப்பேன்...சார்! என்னென்னமோ, எழுதியிருக்கிருனே, அந்த ஆள்? என்ன சார் செய்வது! இங்கே தேடி வந்து, அதுவும் நான் 'மேக் அப்' போட்டுக் கொண்டிருக்கும் போது வந்து, என்னைச் சந்திக்க முயன்ருல் நான் என்ன சார்ஆவேன்!' என்று கேட்டான்,அருணு முதலில் சம்மதித்து விட்டானே ஒழிய இப்பொழுது கொஞ்சம்பயம் அரும்பலாயிற்று! காமத்துக்குக் கண் தெரியாதே. வெறியில் ஜானகி, ஏதாவது செய்தால் என்ன ஆவது என்கிற அச்சம் அவனுக்கு! தளுக்கி, மினுக்கி, அத்தான், அன்பே, என்று நாடகத்தில் நடிக்கும் வரையிலா, விட்டுவைப்பான், அவசரக்காரன் ஐயய்யோ!!

"கவலைப்படாதேடா! அருணு சலம். இன்னைக் கொரு கடிதம் எழுதித்தருகிறோம். அதிலும், கையெழுத்துப்போடு, அருணு என்று. பிறகு, எதுவும் நடக்காது என்ருன் கண்ருவி. பண்டிட், எழுதிக் கொடுத்தார். ஜானகியிடம் சேர்ந்த, அந்தக் கடிதம் இது:

அன்பே!

எபபோது அடைவேன் என்று தான் உங்களைப் போல நானும் துடிக்கிறேன். என்ன செய்வேன்? ஒரே வினுடியில், இந்த நாடக சபாவை விட்டு விட்டு உங்கள் காலடியில் வந்து விழுந்து விடுவேன், ஆனுல், என் தோழிகளிடம் நான் செய்திருக்கிற ஒரு சபதம், என்னைத் தடுக்கிறது, அந்தச் சபதத்தை நிறைவேற்றி வைப்பது உங்களுக்கு ஒன்றும் பெரிய காரியமல்ல. ஊரிலுள்ள சின்னப்பிள்ளைகள் கூட உங்கள் பெயரைச் சொன்னுல் புரிந்து கொள்கிற அளவுக்குப் பெயர் பெற்றிருக்கிற உங்களுக்கு இது ஒரு பெரிசல்ல! வேருன்றுமில்லை. நான் திருமணம் செய்து கொள்கிற ஆள், அகில இந்தியாவிலும் பெயர் வாங்கியவராயிருக்க வேண்டும். அவ்வளவு பெரிய ஆள் அகப்பட்டாலொழிய நான் கலியாணமே செய்து கொள்ளமாட்டேன் என்று சொல்லியிருந்தேன். தங்களுடைய காந்தக் கண்கள், தூண்டிலில் அகப்பட்ட கண்டை மீனைப் போல என்னை அக்கிவிட்டன! இருந்தாலும், அகில இந்தியாவிலும் புகழ் வந்தால், உங்களுக்கும் பெருமை தானே. அதற்கான முயற்சியிலிடுபடுங்கள். அது எப்படி முடியும்? சாத்யமாகக் கூடியதா!—என்று நினைப்பீர்கள். உண்மைதான். அதனுல், இன்னெரு யோசனையும் சொல்கிறேன். ஒரே ஒரு தடவையாவது உங்களுடைய பெயர், இந்தியாபூராவிலும் எல்லாபத்திரிகைகளில் வந்து விட்டால் போதும் — பணக்காரரான நீங்கள், பணம் செலவழித்து விளம்பரம் கொடுத்தால் எல்லாபத்திரிகைகளும் போட்டுவிடும். அப்படியல்ல. தாங்கள் ஒரு அதிசயமான காரியத்தைச் செய்ய வேண்டும்—எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் பாராட்டக் கூடிய காரியமாகயிருக்க வேண்டும்—அதைப் பார்த்துப் பத்திரிககளெல்லாம் உங்கள் பெயரைக் கொட்டை எழுத்தில் போட வேண்டும். அப்படி ஒரு தடவை வந்து விட்டால், அதைக்காட்டி, என் தோழிகளின் பாராட்டுதல்களோடு, உங்களைக் கட்டியணைப்பேன்! கட்டிலில்......சே! எனக்கு வெட்கமாயிருக்கிறது, மேலே எழுத. பதில் எழுத வேண்டாம். செயலில், முனைக உடனே.

உங்கள்
உயிரான காதலி,
அருணு.

—கடிதத்தை ஜானகியிடமிருந்து வாங்கிப் படித்தான், கமலா! யோசித்தான் — பத்திரிகைகள் வியக்க வேண்டும், எல்லோரும் பேச வேண்டும், அப்படியென்ன செய்வது என்று பலதினுசாக யோசித்தான்! பத்து'கப்' காப்பியும், நாலு பாக்கெட் சிகிரெட்டும் (ஜானகியின் செலவுதான்!) செலவானது தான், மிச்சம். கற்பனைக் கமலாவின் மூளையில், எவ்விதக் கற்பனையும் உதிக்கவில்லை! ஒரே நாளில் அகில இந்தியப் புகழ்—நாமென்ன தேன் சிங்கா! காகரீனு!! எப்படிடா அடைவது— ஊம், எல்லாப் பத்திரிகைகளும் வியந்து அதிசயப்பட்டுப் போக வேண்டுமாமே—இப்போது ஆண் பெண்ணுனுள், பெண் ஆணுனுள் என்கிற செய்திகளைத்தான் பததிரிகைகள் அதிசயமாகப் போடுகின்றன—அப்படிப் போட்டால் செச்சே! அப்புறம் உன்னைச் சோதிக்க அரசாங்க டாக்டர்கள் வந்து விடுவார்கள், ஆகவே, அதுவும் வம்பு—என்னடா, செய்றது- என்று, அறைக்குள், இங்கு மங்கும் உலவிக் கொண்டே யோசித்துக் குழம்பிக் கொண்டிருந்த கமலா, "ஆகா! வந்த விட்டது. ஜானகி! பிரமாதமான கற்பனை. அருமையான கற்பனை, எல்லாப்பத்திரிகைகளும் கொட்டை கொட்டையாக போடக்கூடிய சேதி. என்ன தெரியுமாடா? வேருன்றுமில்லை! உனக்காக, நான் எதுவும் செய்யத் தயாராயிருக்கிறேன். என்னை நீ கொலை செய்ய வேண்டும்..." என்ருன், கமலா.

"கொலையா! உன்னையா!!" என்று திடுக்கிட்டுப் போனுன், ஜானகி.

"ஆமாண்டா, கொலைதான்! பக்கத்தில் போய் கசாப்புக்கடைகாரனிடம், 'யோ! கத்தியைக் கொடுய்யா" என்று கூட்டமாக சனங்களிருக்கும் போது போய்க் கேள். கடை வீதியில் நாலுபேர் பார்க்கும் படியாகக் கத்தியை பிடித்துக்கொண்டுவா. யாராவது உன்னை நிறுத்திக் கேட்டாலும் 'ஏனு? ஏன் என்பதைத் தெரிந்து கொள்ள என் தோட்டத்து வீட்டுக்கு நாளைக் காலையில் வாங்க!" என்று சொல்..."

"டேய்! டேய்! கமலா, நீ சொல்வதைக் கேட்கும் போதே, எனக்குப்பயமாயிருக்கிறதடா. எனக்கு இந்தக் காதலும வேண்டாம். மண்ணும் வேண்டாம். நீ வேண்டுமானுல், எனக்காகச் சாகத்தயாராயிருக்கலாம் உன் மனசு, நல்ல மனசு. உன்னைக் கொன்றுவிட்டு, தூக்குமேடைக்குப் போகமாட்டேன் நான். நான் உலகத்தில் வாழவேண்டும்—எனக்கு மாடியிருக்கு! பங்களாயிருக்கு! அதையெல்லாம் விட்டு...டேய்! டேய்! நான் போறேண்டா..."

"முட்டாள்! கொலையென்ருல், உன்னை யாரடா நிசமாகவே கொலை செய்யச் சொன்னு! நீ கொலை செஞ்சதுபோல, எல்லாம் செய்வோம். போலீசார் வந்து கேட்டாலும், "ஆமாம்"னு சொல்லு, அதுக்குத் தகுந்தபடி, எல்லா ஏற்பாட்டையும் நான் செஞ்சுதர்ரேன். 'கொலை'யுண்ட நான், எனக்கு ஒரு மூவாயிரம் ரூபாய் கொடு—எங்காவது வடநாட்டுக்கு நான் ஓடி விடுகிறேன். உன் மேலே, 'கேசு' நடக்கும்... அங்கேயும் கொன்னேன்னே சொல்லு...உனக்குத் தீர்ப்பும் வழங்க 'ரெடி' யாயிருப்பாங்க... அந்தச் சமயம் நான் கோர்ட்டிலே வந்து குதிக்கிறேன். ஒரே பரப்பரப்பாகும்! எல்லாப் பத்திரிகைகளும் போடும்! அருணுவின் சபதமும், நிறை வேறும். எப்படி என் கற்பனை!!"

"ஆகா, கமலா! அற்புதம். அபாரம். உன் மூளை, யாருக்கும் வராது......ஏண்டா? கொன்னப் பிரேதம் எங்கன்னு கேட்டா, என்னடா சொல்றது?"

"நீ ஒண்ணும் சொல்லாதே, வாய் பேசாமலேயிருந்துடு. போலீசாரே, கொன்னுட்டுப் புதைச்சிட்டேன் கிற முடிவுக்கு வந்துடுவாங்க......கொலை செஞ்சதை நீயே ஒத்துக்கும் போது, அவுங்களுக்கு ஒரு சிரமமும் இல்லை... அப்படியே கேட்டாலும். ஆற்றிலே போட்டுட்டேன்னு சொல்லிடு..."

இந்த அபாரமான யோசனையை ஜானகியும் ஏற்ருன்! இந்த யோசனையை, ஜானகிக்காக மட்டும் சொல்லவில்லை, கமலா—அவனுக்கு வடநாட்டுக்குப் போய், பம்பாய், டில்லி முதலிய பட்டணங்களைப் பார்க்கவேண்டும் என்று ரொம்ப நாளாய் ஆசை. பணம் வேண்டுமே? இப்போது, ஜானகி கொடுப்பான்! 'ஜாலி' யாக சுற்றிவிட்டு வரலாம்—ஜானகியின் ஆசையும் பலிக்கும் என்பதாலேயே, மிகவும் தீவிரமாக ஜானகியின் மனதில் 'சரி' என்கிற எண்ணம் வருமாறு, செய்தான். அகில இந்தியப்புகழ் என்ன சாமான்யமா! அருணு எப்படி மயங்கப் போகிருள், இதைக் கேட்டு!!—என்று, ஜானகி, இப்போதே, ஆனந்தப் படலானுன்,

குறித்தபடி, ஜானகி, கசாப்புக் கடைக்குப் போய்க்கத்தி கேட்டான். ஜானகியைப் பற்றி, ஏற்கனவே எங்களூருக்குத் தெரியுமாதலால் யாரும் அவன் வந்ததையோ, கத்தி கேட்டதையோ பொருட்படுத்தவில்லை.


நாலுபேர் பார்க்கும்படியாக, நடுவீதியில் போனுன்! புகழுக்காக—ஊரார் தன்னைப் பற்றிப் பேச வேண்டுமென்பதற்காகச் செய்கிருனுக்கும்!—என்றே, நினைத்தனர்.

அறைக்குள், அக்கம் பக்கத்து வீடுகளுக்கெல்லாம் கேட்கும்படி, ஜானகியும் கமலாவும் ஏதோ

(11-ம் பக்கம் பார்க்க)

### வன்செயல் காணீரோ!

### பிணமானேர் பாரீரோ!!



ஆலந்தூர் சின்னுன்



மயிலாடி மாரியப்பன்

### மாற்றரின் அரசியல் விரோதம் மாய்த்திட்ட கழக மணிகள்! நமது கண்மணிகள்!!



# நமது பாசறை

## 6. பேராசிரியர்

தீயாகிச் கொளுத்திவிஷத் தேளாகிக் கொட்டிவெறி
நாயாகிப் பாய்ந்து விழும் நாசமதி கொண்டோரால்
ஓயாமல் தேய்ந்து உருமாறும் திராவிடத்தைத்
தேயாமல் காப்பாற்றத் தினந்தோறும் போராடி

ஓட்டநடைச் சொல்லாட்சி உயிரூட்டச் சொற்பொழிவை
வாட்டநிலை போக்கி வழங்கிவரும் சொல்வேந்தர்!

செவ்வாய் இதழ்துடிக்கும்
சிவந்தவிழி கனல்கக்கும்
எவ்வாறு வடநாட்டான்
இந்நாட்டை ஆள்வதெனக்

கேட்டுத் துடித்துக் கேட்போரைத் துடிக்கவைத்துப்
பேசிவரும் பேச்சாளர்! பேராசிரியர் இவர்!

எத்தனைநாள் நான்சொல்வேன் புறநா னூறு
இளைஞருக்கு வகுப்பறையில் பாடமாக?

அத்தனையும் பழையகதை! இந்த நாட்டில்
அமைத்திடுவோம் புதியபுற நானூ றென்று
முத்தமிழன் ஆசிரியப் பணியை விட்டார்
முன்னேற்றக் கழகத்தில் ஈடு பட்டார்
எத்திசை புகழ்பெருக்கிச் சட்ட மன்றம்
எழுந்தருளி மாற்றுரை நடுங்க வைத்தார்!

பூவினில் வண்டு கொஞ்சும்;
புனலிடை மீன்கள் கொஞ்சும்;
காவினில் கிளிகள் கொஞ்சும்;
கடலினில் அலைகள் கொஞ்சும்;

பாவினில் ஓசை கொஞ்சும்;
பழகிட இனிய அண்ணன்
நாவினில்—சொல்லில்—கொண்ட
நடையினில் தமிழே கொஞ்சும்!

கொஞ்சு தமிழ்காக்கக் குறைகளைப் போக்கக்
கொண்டாட்டப் புதுவாழ்வை உண்டாக்க நினைத்தபடித்
தொண்டாற்றி வருந்தொண்டர்! துவளாத நெஞ்சத்தார்!

நெஞ்செல்லாம் நினைவு—அந்த
நினைவெல்லாம் கழகமென
மிஞ்சு புகழ்பெற்று
மேம்பட்டு வரும்இவர் யார்?
இவர்தான்
பேராசிரியர் அன்பழகன்.

புலவர் 'பொன்னிவளவன்'

* * *

# கலைவாணர் சொன்னது!

சிவாஜி கணேசன் அவர்களைப்பற்றி தென்றல்திரையில், அவரைக் குழிதோண்டி புதைப்பதுபோல் படம் போட்டு அது அவரது எதிர்காலமல்லவென்றும், இன்னும் பலவும் இழிவாக எழுதப்பட்டிருந்தது. அதுகண்டு நானும், கலையுலகத் தோழர்களும் கொதிப்படைந்தோம். நானும், கண்ணதாசனின் அண்ணன் ஏ. எல். எஸ். அவர்களும் சண்ணதாசனிடம் சென்று இப்படியெல்லாம் ஒரு நடிகரைப் பற்றி கண்டபடி எழுதுவது கண்டிக்கத்தக்கது என்று கூறினேம். கண்ணதாசன் என்னிடம் வருந்துவதாகக் கூறி மன்னிப்பு வெளியிடுவதாகவும் வாக்களித்தார். இதன் பேரில் நான் ஏ. எல். எஸ், கண்ணதாசன் மூவரும் ரேவதி ஸ்டுடியோவில் சிவாஜி கணேசனைச் சந்தித்து சமாதானப்படுத்தினேம். தென்றல் திரையில் கண்ணதாசன் மன்னிப்பு எழுதுவதாக நேரிலேயே ஒத்துக்கொண்டார். கணேசனும் சமாதானமடைந்தார்.

ஆனல், திடீரென்று அவர் மீண்டும் தென்றல் திரையில் கணேசனையும், என்னையும்பற்றி அவதூருக எழுதத் தூண்டியிருப்பதானது, தி. மு. கழகத்துக்கே அவமானம் உண்டாக்குவதாயிருக்கிறது. அறிஞர்களும், நல்ல உழைப்பாளிகளும், தியாகிகளும் இருக்கிற தி. மு. கழகத்தில், இது போன்ற சிறுபிள்ளைத்தனமான விளையாட்டுகளில் ஈடுபட்டு பெரியவர்களையும் சந்திக்கு இழுக்கின்ற கண்ணதாசர்களும் இருக்கிருர்களே என்பதற்காக வருந்துகிறேன். கழக முக்கியஸ்தர்கள் இதை கவனித்து கழகத்தின்மீது கலைஞர்களுக்கு இருக்கிற பற்றுதலை இதுபோன்ற தனிப்பட்டவர்கள் அழித்துவிடாமல் பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலைமை இந்த அளவுக்கு முற்றிவிட்டக் காரணத்தால் தான் அறிக்கையாக எழுத நேர்ந்தது. தென்றல் திரையில் வெளிவந்த 'வாகினியில் நடந்த சம்பவம்' என்ற கட்டுரையைப் பற்றிய உண்மை நிலையை அறிய விரும்புவோர் என்னைக்கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

சென்னை (4—2—56) என். எஸ். கிருஷ்ணன்.

* * *

(இதைத்தேடி எடுத்தனுப்பியவர்சேலம்--சூரமங்கலம் தோழர் செகநாதன். தென்றல்திரை அப்போது கவிஞருடையது)

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

ஞர்களா? சிறப்பாக சினிமா நடிகர்கள்-குறிப்பாக எம். ஜி. ஆரின் செல்வாக்கைத் தாங்க முடியாமல் சம்பத் வேறுகட்சி வைக்கப் போனது நியாயம் என்ருல், சம்பத் செல்வாக்கு எங்களுக்கு இல்லை என்ற அடிப்படையில், நீண்டநாட்களுக்கு முன்பே, நெடுஞ்செழியன் வெளியேறி இருக்க வேண்டும். ஆனல் கட்சியின் நல்ல காலம், நெடுஞ்செழியன், சம்பத்தாக மாறிவிடவில்லை மாறக் காரணமிருந்தும்! மேலும் சம்பத்தைவிட கட்சிக்காக அதிகம சாதித்தவர்கள் கட்சியிலிருந்தும் இன்னு ஒரு செல்வாக்கும் கிடைக்காமலே இருக்கிருர்கள் என்பதும் சம்பத்துக்குத் தெரியாமலிராது.

இதெல்லாம் எவருமே சாதாரணமாக பகுத்தறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள். இதைப் பகுத்தறிந்து கொள்ளத் தெரியாதவருமல்ல சம்பத்- தெரிந்தவர் தான்,

கட்சிக்கே கொள்கை லகுத்து செயல் திட்டம் தரத்தெரிந்த ஒருவர்-ஒரு புதுக் கட்சியையே வைத்து வளர்க்கும் அளவுக்கு திறனும் துணிவும் பெற்ற ஒரு தலைவர், கட்சி தலைவர்களுக்கிடையே உள்ள செல்வாக்கின் ஏற்றத் தாழ்வுகளைப் பகுத்தறிந்து, தாங்கிக் கொள்ளும் சக்தியை இழந்தவராக இருப்பார் என்பதை நம்மால்நம்ப முடியாது. எல்லாம் தெரியும் சம்பத்துக்கு— —தெரிந்திருக்கவும் வேண்டும்.

எல்லாம் தெரிந்த சம்பத், சண்டித்தனம் பண்ணுகிருர் என்ருல், அந்த அளவுக்கு தி. மு. க. வை மொட்டையடிக்கவேண்டுமென்ற பொது எதிரி முகாமின் 'புதுப் பழக்கம, சம்பத்தை, எல்லாம் தெரிந்தவர்--பகுத்தறியத் தவருதவர்-என்ற தகுதியிலிருந்து பிரித்துவிட்டது என்றே நடுநிலை நிற்கும் நாமும் பிறகும் மதிக்கிருேம்!

இதில் இன்னென்று: திரு சம். பத் அவர்கள் சொல்லுசிற எம்.ஜி. ஆர். ஆதிக்கம் கட்சியில் மேலோங்கிவிட்டது எனபதை எப்படி ஏற்கமுடியும்-ஏற்க முடியுமா?

எம். ஜி. ஆருக்கு அண்ணுத்துரை எவருக்குமில்லாத முக்யத்வம் கொடுக்கிருர் என்பது சம்பத்தின் புகார்,

இது உண்மையானல், சென்ற தேர்தலில் யாராரையோ, (சம்பத் எஸ். எஸ். இராசேந்திரன் உள்பட) தி. மு. க. சார்பில் போட்டியிட அநுமதித்த அண்ணுத்துரை, எம், ஜி, ஆரை ஏன்நிறுத்தவில்லை? அது தவிர சென்னை மேல் சபை (எம், எல். சி.)க்கு, திரு. அண்ணுதுரை, கே. ஆர். ராமசாமியை நிறுத்தினரேயன்றி எம்.ஜி. ஆரை அல்ல !

இச்சம்பவங்கள் காதுகளால் கேட்கப்பட்டவை. நடப்பு இதுவானல்-சம்பத் மாதிரி எம், ஜி. ஆரும் கோழி இதயம் படைத்தவராக இருந்தால், நான் இவ்வளவு செய்கிறேன்--எனக்கொரு நாற்காலிக்கு வாய்ப்பில்லையா? என்று கேட்டுவிட்டு எப்பொழுதோ வெளியேறி இருப்பார் !

இந்த ஒரு சம்பவத்தை எம்.ஜி ராமச்சந்திரன், சம்பத் மாதிரி, கடுரமயான விஷயமாக எடுத்துக்கொ

(11-ம் பக்கம் பார்க்க)

# பாவி மன்னிப்பு

தோழன்

## 2

விடுதலைத் தேவன், நெற்றி வியர்வையை நிலத்தில் வழித்துப் போட்டு, அது பட்டுக்காயும் இடத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"வியர்வை வழிவதும், அது மண்ணில் பட்டால் காய்ந்து போவதும் ஆழ்ந்து நோக்கிச் சிந்திக்கக் கூடிய அதிசயந்தானா?"

வியர்வை நாற்றமும் அழுக்குச் சட்டையின் அவல கோலமும் எப்போதுமே பிடிக்காத, 'மேற்குடி' மக்கள் கூடாரத்திலிருந்து வழி தவறி வந்தமர்ந்த ஒருவன், கிண்டல் குரலில் கேள்வி போட்டான்.

"உழைத்து உறமேறிய கரங்களின் நிரந்தரப் பகைவர்கள் நீங்கள். வியர்வையின் நாற்றத்தில் தான் இந்த உலகத்தின் எல்லாச் சுகந்தங்களும் பிறக்கின்றன வென்பதை இரண்டொரு திங்களுக்கு முன்பே நீங்கள் மறந்து விட்டீர்கள்.

பரட்டைத் தலை உங்களுக்குப் பரிகாசத்துக்குரிய உபமானமாக இப்போது தெரிகிறது.

அழுக்குச் சட்டையும் பஞ்சடைந்த கண்களும் உங்களுக்கு முன்பு எதிர்ப்படுவதையே நீங்கள் விரும்பவில்லை.

உங்களுடைய ஒழுக்க உபதேசங்களைக் கொட்டி முழங்க கூட்டம் போடும் போதும் விரலில் அழுக்குத் தெரியாத மேனுமினுக்கிகள் முன் வரிசையில் அமர்வது தான் உங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக வெளிப்படையாகவே சொல்லக் கூடிய துணிச்சலைப் பெற்று விட்டீர்கள்."

விடுதலைத் தேவனின் குரல் வெண்கல நாதமாக ஒலித்தது. அநேகர் எதிர்க் கேள்வி போடுவதையும் கவனியாமல், ஏதோ ஓர் சொற்பொழிவு செய்யும் போக்கில் ஆத்திரத்துடன் பேசிக் கொண்டே போனான்.

"சமுதாயத்திலுள்ள அனைவருமே ஏமாற்றுக் காரர்களாகவும் வஞ்சகர்களாகவும் இருப்பதாகப் பீத்திக் கொண்டே சமுதாயத்தின் வெற்றி தோல்விகளில் மட்டுமே கவனஞ் செலுத்துவதாக மார்தட்டிக் கொள்வதில் உங்களுக்கு வெட்கம் பிறக்கவில்லை?"

விடுதலைத்தேவன், சற்று மூச்சு வாங்கிக் கொண்டான். கேள்வி கேட்டவன் எல்லோருடைய கால்களையும் நோட்டம் போட்டுக் கொண்டிருந்தான்.

'சிறுவனே!' தேவன் மீண்டும் துவங்கிவிட்டான்.

சராசரி மனிதரைச் சந்திக்கும் போது அவர்கள் முகத்தை மட்டுமே சந்திக்கப் பழகிக் கொள்ளுங்கள், நீயும் உன் கூட்டத்தாரும் கால்களைப் பார்த்து நீதி கொள்வதை விட்டு விடுங்கள்.

இருட்டில் நடைபயிலும் கோழைமனம் கொண்டவன் தான் எதிர்ப்படும் எல்லா உருவங்களையும் காலைப் பார்த்தே பயந்தொளிவான்.

நீங்கள் வெளிச்சத்தில் ஓடுகிறீர்கள். அந்த வெளிச்சத்தை உங்கள் பயந்தெளிய ஏன் பேயாக நினைத்து மருள்கிறீர்கள்!

பறக்கத் தெரிந்து கொண்டதாக எப்போது நீங்கள் நினைத்து விட்டீர்களோ, அப்போதே நீங்கள் பறக்க வேண்டியவர்களாகி விட்டீர்கள்.

பறவுங்கள். மேலே பறவுங்கள். உங்கள் சிறகுகளுக்கு 'தெம்பு' இருக்குமட்டும் கீழ்நோக்கிப்பாராமல் வான வெளியிலேயே வட்டமிடுங்கள்.

கோபுர உச்சியிலேயே கலைப் பாறுங்கள்.

உயர வளர்ந்த மரத்தில் உச்சாணிக் கொம்பிலேயே உணவும் உட்கொள்ளுங்கள்!

ஒரு முழச்சரிகை வேய்ந்த உயர்தரமான வேட்டியை இடது கையால இடுப்பு வரை தூக்கிப் பிடித்துக் கொண்டு பரக்கப்பரக்க ஓடி வந்தான் ஒருவன். உழக்குச் சர்க்கரையை ஒரேயடியாக வாயில் கொட்டிக் கொண்டு தினறும் சிறுவனின் கன்னங்களைப் போல, அவன் கன்னமும் புடைத்திருந்தது. தாமிரத்தில் உருக்கி வார்த்தது போலிருந்த அவன் முகத்தில் பிரமாதமான பகுதி அவன் கண்கள்தான். எப்போதும் இரத்தக் கலப்பேறி இருப்பதைப் போலவே அப்போதும் இருந்தன,

அந்தக்கண்களில், அலட்சியம் அகங்காரம், ஆணவம், அத்தனையும் நிழலிட்டன.

தேவனைச் சுற்றியிருந்தோர் கால்களை கவனித்தபடியே கூட்டத்தில் வந்தமர்ந்தான்.

"அந்த நாட்களில் பொன்தேடி அலைந்தவர்கள் பூமியைக் கவனித்ததைக் காட்டிலும் இவர்கள் மனிதனின் கால்களை ஆழ்ந்துக் கூர்ந்து கவனிக்கின்றனர்" இரண்டொரு நாட்களாகக் கூப்பிடக்கிடைக்காத ஒருவன் சன்னக் குரலில் மென்று விழுங்கினான்.

"அவர்கள் பொன்தேடினார்கள் இவர்கள் புகழ் தேடுகிறார்கள்!" முரட்டுத் தொண்டை படைத்தவன் பதிலடி கொடுத்தான்.

"மனிதனுடைய கால்களிலிருந்தா?"

"பின்? இருதயத்தை இவர்களுக்காக எவன் ஒதுக்குவான்?"

"பார்த்தீர்களா? பார்த்தீர்களா? எங்களுக்குக் காலை மட்டுந்தான் ஒதுக்குவார்கள் என்று தேவனின் முன்னிலையிலேயே தெரிவிக்கிறார்கள்! வன்முறையை வளர்க்கிறார்கள். எங்களுடைய ஒழுக்கபோதனைகள் இவர்களுக்கு வேப்பங்காயாகக் கசக்கின்றன. எங்களை எப்படியும் வன்முறை கொண்டு அழித்துவிடத்துடிக்கிறார்கள்!"

சரிகை வேட்டிக்காரன் சடசட வெனப் பொரிந்து கொட்டினான்.

விடுதலைத் தேவன் கூட்டத்தை விலக்கி அவன் முன் வந்து நின்றான்.

"நீயும் உன் தற்போதைய தலைவனும் படித்த மலைபோலவு புத்தகத்தில் எந்தப் புத்தகத்தில் இருக்கிறதென்று எடுத்துச் சொல்ல நான் சிரமப்படப் போவதில்லை. ஆனால்......

இட்லரின் ஆரம்ப கால வளர்ச்சியை அப்படியே நீங்கள் உருப் போட்டிருக்கிறீர்கள்.

முசோலினி முதன் முதலாகச் செய்த தந்திரத்தை முழுவதும் பரிசோதனை செய்து பார்க்கத் துடிக்கிறீர்கள்!

ஜெர்மனிய அரசியல் மன்றக் கட்டிடத்தைக் கொளுத்தியது யார் தெரியுமா? நாஜிகள்!

பழிபோட்டது யார் மீது தெரியுமா? பொதுவுடமையர் மீது!

இத்தாலியப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் திடீர் திடீரென கொன்று போட்டது யார் தெரியுமா? பாசிஸ்டுகள்!

பழியேற்றது யார் தெரியுமா? அந்த நாட்டு சோஷலிஸ்டுகள்!

அதையே தான் நீங்கள் செய்து பார்க்கிறீர்கள். அந்த இரு பூதாகார சக்திகள் வளர்ந்த வேகத்தில்தான் நீங்களும் வளரத் துடிக்கிறீர்கள்.

இளமை முதலே தாமிரத்தை உட்கொண்டவன் உடலைப்போல் உங்கள் உள்ளத்தை ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் ஓடவிட மறுக்கிறீர்கள்.

பனிரெண்டு ஆண்டு காலமாக விடுதலைச் சக்திகளுடன் நீங்கள் இருந்த போது ஏற்படுத்திக் கொண்ட பொதுவான எதிர்ப்பை இரண்டு மாதத்தில் நட்பாக்கிக் கொண்டதாக நினைக்கிறீர்கள்.

இரண்டு மாதத்தில் ஏற்பட்ட 'எதிரிகள்' தான் உங்களுக்குத் தெரிவதாகக் கற்பனை செய்து கொள்கிறீர்கள்.

இந்தப் பனிரெண்டு ஆண்டு காலத்தில், நீங்கள் பேசப் புகுந்த இடத்தில் தொல்லை விளைவித்த சக்திகளை நீங்கள் சந்தித்ததே இல்லையா? அதே சக்திகள் இப்போதும் உங்களைத் தொடராது என்பதை எப்போது ஆச்சயப் படுத்திக் கொண்டீர்கள்?

விடுதலைச் சக்திகளான என்னைப் பின்பற்றுவோர்க்கும், புத்தம் புது அரசியலைப் புகுத்தப் புறப்பட்டிருக்கும் உங்களுக்கும் பொதுவானதோர் எதிரி இப்போதும் இருப்பதை நீ மறந்து விட்டாய்!'

நெடுநேரம் பேசிவிட்டகளைப்பில் 'தேவன்' சற்று நிறுத்தினான்.

"உன்னிடம் பேச்சுப் போட்டி நடத்துவதற்கு நான் வரவில்லை. உன்னையும் உ- கூட்டத்தாரையும் தவிர, எங்களுக்கு இப்போது

---

## வருந்துகிறோம்

### நாவலர் மகன் மறைவு

நமது நாவலர் நெடுஞ்செழியனின் இரண்டாவது மகன் கபிலன் தனது ஒன்றரை வயதில் 28—5—61 அன்று இயற்கையெய்திய செய்திகேட்டு, மிகவும் வருந்துகிறோம். எமது மனமார்ந்த அனுதாபங்களை நாவலருக்கும் அவரது துணைவியார் டாக்டருக்கும் குடும்பத்தாருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

[9-ம் பக்கத் தொடர்ச்சி

யாரும் பகைவர்களில்லை. விடுதலைச் சக்திதான் எங்களுக்கு முதல் எதிரி!'' சரிகை வேட்டிக்காரன் அதே பாட்டுப்பாடும் பாவனையில் இராகத்தோடு சொன்னான்.

"அப்படியானால் இங்கு ஏன் வந்தாய்!''

"வன்முறைச் செயல் நடக்கிறதா என்பதைப் பரிசோதிக்க வந்தேன்''

"அட பாவிகளா! மற்றவரை ஆத்திரமூட்டும் காரியங்களைச் செய்து அவர்கள் ஆத்திரப்படுவதில் இலாபம்காணும் சாக்கடைத்தனமான அரசியல் நடத்தித்தான் நீங்கள் வயிறு வளர்க்க வேண்டுமா?''

நீங்கள் மற்றவர்க்கு ஆத்திரமூட்டும் செயல்களை அழகாகச் செய்கிறீர்கள். விடுதலைச் சக்தி உங்கள் மீது வெகுவாக ஆத்திரப்படவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறீர்கள்.

ஆதரவு என்றைக்குமே கிடைக்காத ஒன்ருகிவிட்ட காரணத்தால், ஆத்திரத்தைப் பெற்றுவது அதன் மூலம் வளர நினைக்கிறீர்கள்.

விடுதலைச் சக்தி மீது பழிபோடுகிறீர்கள்.

இப்படியெல்லாம் செய்யும்படி உங்களுக்குப் பெரிதான பரிசு கொடுத்துச் சரியாகப் போதனை செய்யப்பட்டிருக்கிறது.

எப்போதோ, யாராலோ, எதற்காகவோ 'தூபம்' போடப்பட்டுள்ள உங்கள் உள்ளம் விநோதமாக மாறிச் சோர்ந்து போயிருக்கிறது.

உழைக்காமலே சேர்த்துக் கொண்ட பொன்னுக்கும் கரன்சிக்கும் இனியாவது நீங்கள் ஒழுங்கான கணக்கினை உரியவர்களுக்குக் காட்டுங்கள்.

மொழி எதிர்ப்புப் பணத்தைப் போல் இதனையும் விழுங்கி ஏப்பம் விட நினைத்தால், சுளையாகக் கொடுத்த அந்தத் திருவாளர்கள் உங்களைச் சும்மா விட மாட்டார்கள்.

ஏதோ ஓர் நாளைக்கு உலகத்திலேயே எவனும் அனுபவிக்காத சுகானுபவம் உங்களில் இரண்டொருவர்க்கும் கிடைக்காதா என்று ஏங்கி தவிக்கிறீர்கள். உங்களுடைய உள்ளத்தின் அடித்தளத்திலே மிகப் பாழ்பட்ட எண்ணங்கள், கபடம் நிறைந்த உணர்ச்சிகள், பெருங்குற்றத்திற்கு மற்றவரை ஆளாக்கும் ஆசைகள் மண்டிப் பெருத்து விட்டிருக்கின்றன.

விடுதலைச் சக்திக்கு எப்போதும் எதிர்ப்பான கூட்டத்தின் சுட்டு விரலசைவில் துள்ளிப் பாயும் 'நோய்க் கிருமி' களாக உங்களை உருமாற்றிக் கொண்டீர்கள். ஒரு காலம் வரும் அப்போது எந்தக் கூட்டம் உங்களை இப்போது போஷித்து வளர்க்கிறதோ அந்தக் கூட்டத்திடையிலேயும் துரோகம், வஞ்சகம், கழுத்தறுப்பு எனும் நோய்களைப் பரப்பத்தான் போகிறீர்கள்......

சரிகை வேட்டிக்காரன் கண்களைப் போலவே முகமும் சிவப்புக்களைத் தட்டிற்று, உறுமத்தொடங்கினான்.

"எப்படியோ, எதற்காகவோ எங்களுக்கும் ஆட்கள் நிச்சயமாகக் கிடைக்கத்தான் போகிறார்கள்.

ஏனென்றால், ஒரே கொடியில் ஒரே மலர் தான் மலர வேண்டும்' என்று நினைப்பவர்களல்ல நாங்கள்!'' பிரமாதமான தத்துவத்தை உலகுக்குணர்த்திவிட்ட பெருமையில் நாற்புறமும் பார்த்துக் கொண்டான்.

"ஆசியா முழுவதும் எனக்கே எனக் கொக்கரிக்கும் மாசேதுங் இப்படி ஒரு முறை சொன்னதாக நினைவு!'' கூட்டத்திலிருந்த யாரோ ஒருவர் சொன்னார்.

"ஆயிரம் பூக்கள் மலரட்டும்'' என்றுதான் அவன் சொன்னான். இது நானே சொல்வது. சரிகை வேட்டிக்காரன் அலறினான்.

"அப்படிச் சொல்வது நீயாகத்தான் ஏன் இருக்க வேண்டும்?'' எங்கிருந்தே எதிர்க்குரல் ஒலித்தது.

"அதுவா? ஏனென்றால், நான் கவிஞன். தத்துவவாதி!''

ஓகோ! ஒரே கொடியில் ஒரு கோடி பூக்கள் மலர்வதானாலும் ஒரே ரகமான மலரல்லவா மலர வேண்டும்? மல்லிகைக்குப் பக்கத்தில் எருக்கம் பூவும் அதற்கும் பக்கத்தில்.........

போதும் போதும் ஒரே வகையான கொடியில் ஒரே வகைப் பூக்கள் தான் மலர வேண்டும். அதுதான் முக்கியம். ஓராயிரமா? ஒரு கோடியா? என்பதல்ல பிரச்னை!''

நீங்கள் அரைத்துக் குடித்த தத்துவத்தில் இது இல்லையா? 'தேவ'னையும் முந்திக்கொண்டது மக்கள் கூட்டம்.

"உங்களுக்குத் தத்துவம் புரியாது. தத்துவவாதிகளையும் நீங்கள் விரும்புவதில்லை. கூட்டங்கூட்டுவதிலும் கூவி அழுவதிலுமே தேசத்தின் விடுதலை அடங்கிக் கிடப்பதாக நீங்கள் முடிவு கட்டிவிட்டீர்கள்'' சரியானபடி கிடைத்த நினைப்பில் சரிகை வேட்டிக் காரன் உரத்த குரலில் பேசத் தொடங்கினான்.

"அடசட் நிறுத்து. விடுதலைக்கு வேறெதுவாம் வழி!

உயர்தரமான ஓட்டல் அறையொன்றில் உட்கார்ந்து பேசி அச்சாரம் பெறுவது போன்றதல்ல விடுதலை.

நிருபர்களை விருந்துக்குஅழைத்துநீளமான அறிக்கைகளை விடுப்பதல்ல விடுதலை.

நினைக்கும் எதனையும் உடனடியாகச் சொல்லாவிட்டால் உடலில் எங்காவது அரிப்பு வந்துவிடும் என்று சமாதானஞ் சொல்லி, தலை கொழுப்புத்தனமாகப் பேசித்திரிவதால் கிடைப்பதல்ல விடுதலை.

கூட்டங்கூட்டுவோம். குறைகளைச் சொல்வோம்.

கூவி அழுவோம். இப்படி எத்தனை நாளைக்கு அழுது வடிந்தே அடிமைவாழ்வு நடத்துவது எனக் கூட்டத்தையே கேட்போம்.

ஆயுதப் பேச்சேதும் அடிபடாத இடத்தில் கூட்டங் கூட்டியும் கூவி அழுதும்தான் விடுதலை பெற்றதாக வேண்டிய வரலாறுகள் இருக்கின்றன.

கூட்டங்கூட்டுவோம்--ஏனென்றால் கூடுங்கூட்டத்தில் நாங்கள் ஓர் அங்கம்.

கூவி அழுவோம்—ஏனென்றால் அழுது கொண்டே பிச்சை வாழ்வு வாழ்ந்து வரும் கோடிக் கணக்கான மக்களில் நாங்களில் ஓர் பகுதி!

எங்கள் மத்தியில் கண்ணீர் விடத் தெரிந்திருப்பது பாவமல்ல—ஏனென்றால், வஞ்சகமும் துரோகமும் கலவாத இரக்கமும் தூய்மையும் கொண்ட இதயத்திற்கு அதனை ஓர் அடையாளமாக இந்த உலகம் மதிக்கிறது.

நாங்கள் கோரும் விடுதலை கண்ணீரில் தான் மிதந்து வர வேண்டும்—எங்கள் குடும்பத்தார் அல்லது எங்கள் சந்ததியார்கொட்டும் கண்ணீரில்!

கரன்சி நோட்டுக்களில்--வேலியிட்ட போலீஸ் பாதுகாப்புச் சொற்பொழிவுகளில் விடுதலை கிடைக்கும் என்று உங்களைப் போல் நாங்கள் நம்பவில்லை.

'தேவன்' ஆத்திரம் தொனிக்கப் பேசினான். அவன் ஆத்திரம் எப்போது தீருமோ!

—0—

(4-ம் பக்க தொடர்ச்சி)

டனை அளிப்பதென முடிவுசெய்தோமோ, அங்கே அனுப்புவோம்......

வக் : அவர்களைச் சுட்டதும் உடல்களை என்னசெய்வீர்கள்?

பதி : முன்பே வெட்டப்பட்ட குழிகளில் புதைப்போம்!

கே : எப்படிச் சுடுவீர்கள்?

பதி : நிற்க வைத்து அல்லது மண்டியிடச் சொல்லி......சில பேர் இப்படிச் செய்யாமல் ஒவ்வொருத்தரையும் நிற்க வைதது பின் பக்கம் கழுத்தில் சுட்டுக் கொல்வார்கள்......

கே : ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோருக்கும் இப்படித் தான் முடிவா?

பதி : இப்படித்தான் அனைவரையும் செய்தோம்... 1942 வரையில். இந்தக் கொடுமையைப் பார்க்க எங்களுக்கே கஷ்டமாகயிருந்ததால் ஹிம்லர், குழந்தைகளை கொல்லமட்டும் "நச்சுவாயு வான்களை'' செய்தனுப்பினார்......

கே : இந்த "வாயுவான்'' முறையைபபற்றி விளக்க முடியுமா...

பதி : இந்த "வான்'' களைப் பார்க்கும் போது, நன்றாக மூடப்பட்ட லாரிபோல இருக்கும். இதில், 15, 20 பேரை ஏற்றுவோம். வானை ஸ்டார்ட் செய்யும் போதே, அருகிலிருக்கும் ஒரு ஸ்விட்சை அமுக்குவோம். ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்டிருந்த நச்சுவாயு, ஒரு குழாய் மூலம், பாயும். பத்து அல்லது பதினைந்து நிமிடங்களில, பின்னால், மூடப்பட்ட பகுதியில் ஏற்றப்பட்ட பெண்களும் குழந்தைகளும் பிணமாகி விடுவார்கள்...... காரை ஸ்டார்ட் செய்யும் போது இவர்களுக்கென்றுமுன்னதாகவே வெட்டப்பட்ட குழிகளைநோக்கிஓட்டிச்செல்வோம் அந்தக்குழிகள்ஓரம் போனதும் வானின்பின பகுதியைத்திறந்து பிணங்களைக் 'கொட்டி'. மூடும்படிஅதற்கென இருந்தஆட்களிடம் சொல்வோம்......

யூதர்களின் பிணங்களைப் புதைக்க எவ்வளவு பெரிய குழிகள் வெட்டப்பட்டிருக்க வேண்டும்? (முதல் பக்கம் பார்க்க) இந்த வேலைக்கு, அடுத்து பிணமாக வேண்டிய யூதர்களே பயன் படுத்தப் பட்டார்களாம்! அவர்களுக்கு யுத்தக் கைதிகளைப் புதைப்பதாகவே, ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. பிறகு, அவர்கள் விஷயம் புரிந்து தப்ப முயல்கிறார்கள் என்றதும், முறைகள் மாற்றப்பட்டனவாம். அப்படித் தப்பிய லோமாகால் எனும் யூதர் சொன்ன சாட்சியம் :

'நகரத்திலிருந்து, எங்களை வேற்றிடத்துக்குக் கொண்டு போவதாகச் சொல்லி அழைத்துப்போனார்கள். ஒரு அதிகாரி இதோ பாருங்கள், கொடுத்த வேலையை ஒழுங்காகச் செய்தால் உங்களை நல்ல இடத்துக்கு அனுப்புவோம் என்றார். அங்கிருந்து ஒரு மைல், இரண்டு மைல் தொலைவிலுள்ள தூரத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே நாங்கள் எல்லாம் சேர்ந்து 68,000 குழிகளைத் தோண்டினோம். தோண்டத் தோண்ட பிணங்களை பின்னாலேயிருந்து போட்டுக்கொண்டு வந்தார்கள். யூதர்கள், ரஷியர்கள், போலந்தியர் முதலியோரின் சடலங்கள் இருந்தன. குண்டடிப்பட்டு செத்தவர்கள் போலிருக்கிறது, என்றே நாங்கள் எண்ணிக் கொண்டிருந்தோம். திடீரென, நான் வெட்டிய ஒரு குழியில் வண்டியிலிருந்து ஒரு பிணம் வீசப்பட்டது! என் தம்பியின் பிணம் அது! சில தினங்களுக்கு முன்புதான், அவனும் அவனோடு பத்தாயிரம் பேரும் அழைத்து வரப்பட்டனர் ...பார்த்தேன்...அவன் கழுத்தில் குண்டு பாய்ந்திருந்தது...

(—தொடரும்)

[2-ம் பக்கத் தொடர்ச்சி

"சுமாரிலே" தான் உள்ளது!! அது ஒரு புறமிருக்க, இந்தப் புள்ளி விபரம் சரியா என்று பார்ப்போம். கோடம்பாக்கத்தில் நடந்த (ம்ம நாட்டிற்கென் எந்த விதமான கமிட்டியும் போடுவதை "ஜனநாயக வீரர்" சம்பத், ஒப்பவில்லை. தலைமைக் கழகத்தின் பெயரைப் பயன்படுத்தி, மாவட்டத்தையோ அல்லது கோடம்பாக்கம் கிளையையோ கூட அழைத்து ஆலோசிக்காமல், இம்மாநாடு நடத்தப் பட்டது. மாநாடு முடிந்ததும் பணத்தை வாங்கிக் கொண்டு காரில் எப்படிப் பறந்தார் என்று மாநாட்டின் காரியங்களைக் கவனித்த காஞ்சி மணிமொழியாரைக் கேட்டால் சொல்வார்.

அம்மாநாட்டிலேயே அறிவிக்கப்பட்டது — ரூபாய் பதினாயிரத்துக்கு மேல் மிச்சமென்று!!

அந்தக் கணக்கு என்ன என்பதை ஒப்புவிக்க, சம்பத், எப்போதும் முன் வரவில்லை. கழகத்தின் தணிக்கைக்குழு, இரண்டு முறை, இதற்காகவே தலைமை நிலையத்தில் கூடி ஊர் திரும்பியதுதான் மிச்சமே தவிர, சம்பத், கணக்கு வழக்கைப் பார்க்கமனம் ஒப்பவில்லை. மாநாட்டின் செயலாளரான மதியழகன்கூட, அறியார். அப்படிச் சம்பத்திடம் போன பணம், குறைந்தது பதினாயிரமாவது இருக்கும்! (கோடம்பாக்கம் கழகத் தோழர்கள் கணக்கு வேறு விதமாக உள்ளது!!) அவர் வசம் போன, இதுமட்டுமல்ல, இந்தி எதிர்ப்பு நிதி.

'நம் நாடு' இதழ் மூலம் இந்தி எதிர்ப்பு நிதியாகச் சேர்ந்த தொகை ரூபாய் 9799 ஆகும்.

இதில் ரூ 6322 தான் தலைமைக் கழகத்துக்கு வந்தது. மீதித் தொகை ஆங்காங்கு, தோழர் சம்பத்திடம் அளிக்கப்பட்டதை, இதழில் வெளியிடுவதற்கான விபரத்தைமட்டும் தெரிவித்து, தொகையை அவரே வைத்துக் கொண்டார்.

தலைமைக் கழகத்திலிருந்த தொகையிலும் ரூ 225 போக மீதியை, மாநாட்டுக்கான செலவுகளுக்கு என்று சொல்லி, சம்பத் வாங்கிக்கொண்டுவிட்டார்.

இந்தி எதிர்ப்பு நிதியாகத் தனிப்பட்டத் தோழர்கள் அனுப்பிய தொகை ரூபாய் 8574.

மாநாட்டின் மூலம் கிடைத்த மிச்சத் தொகை!!

இரண்டும் சேர்த்து "சுமார்" 9500 இருக்கும் என்கிறார், சம்பத்! அவ்வளவுகூட வேண்டாம் காலணாவாகவே யிருக்கட்டும், கழகத்தைவிட்டுப் போன இவர், 'இந்தா உன் காசு!' என்று தூக்கியெறியத்தானே வேண்டும்? அதற்குக் காரணம் சொன்னாராம், கோவைக் கூட்டத்தில்,

"நடைமுறையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் துவங்க தி. மு. க. தலைவர்களிடம் திட்டமோ விருப்பமோ இல்லை. எனவே! அந்த நிதி தமிழ் தேசீய கட்சியின் நிதியில் சேர்க்கப்படும்" (தமிழ்நாடு 26—5—61) எப்படி கதை! திட்டமோ, விருப்பமோ, இல்லையாம்! இவர் எப்படி கண்டு பிடித்தார்? வரும் மாநில மாநாட்டில்கூடத் திட்டம் வகுக்கலாம்! இவருக்கென்ன அதைப் பற்றி!!

குமாரபாளையம் பொதுக்குழுவில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவுக்குத் தலைவர் சம்பத். உறுப்பினர்கள்: கருணாநிதி, அன்பழகன் மதியழகன், சிற்றரசு, சத்தியவாணிமுத்து, மனோகரன், கோவிந்தசாமி, ப. உ. ச, கண்ணதாசன், கே. ஆர் ஆர், தர்மலிங்கம் எ.ப. பி, மதுரை முத்து, அன்பில் தருமு, எம். பி. சுப்பிரமணியம், எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆகியோராகும்.

எதையும் தீர்மானிக்கவேண்டிய இக்குழுவிற்குத் தலைவர்தான் சம்பத்தே ஒழிய, மீதி விஷயங்களைத் தீர்மானிக்க வேண்டியது இந்தக்குழுதானே? அதுதானே சனநாயகம்? கண்ணதாசன், சம்பத், எம். பி. சுப்பிரமணியம்— இம்மூவர் தவிர, எல்லோரும் இங்கேதானே இருக்கிறார்கள்!

குழுவுக்குச் சொந்தமான பணத்தை 'மெஜாரிடி' யினர் உள்ள குழுவிடம் ஒப்படைப்பது தானே நியாயம்? போராட்டத்தைப் பற்றிய முடிவு எடுக்க வேண்டியது இக்குழுவே தவிர சம்பத்தா?

அப்படியே திட்டம் வகுக்காமல் இருந்தாலும், எந்த முகத்துடன் அப்பணத்தைப் புதுக் கட்சியில் சேர்க்கலாம்? அந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்கென்று பாடுபட்டவர்கள் அத்தனை பேரும் இன்று அவர் கட்சியிலா இருக்கிறார்கள்? மாநாட்டுச் செயலாளர் மதியழகன் இங்கே! கடைசிவரை மாநாட்டுக்கான காரியங்களைக் கவனித்த காஞ்சி மணிமொழியார்—கவுன்சிலர்கள் கோபால், சா. கணேசன், ஏ. எஸ். ராமன், குமார், சைதை சம்பந்தம், கிருட்டிண மூர்த்தி, எம். எஸ். இராமச்சந்திரன், கண்ணப்பா முதலிய கோடம்பாக்கம் கழகத்தவர்களில், எத்தனை பேர், அங்கேயிருக்கிறார்கள்? மாநாட்டுக்கென பாடுபட்ட, ஓடியாடி இரவும் பகலும் விழித்த, ஒப்பற்ற தொண்டர்களில் உண்டா, இன்று சம்பத்திடம்? கிடையாதே! ஒரே ஒருவர் —வ. சங்கரநாராயணன் என்பவர்—அதுவும் பந்தல் தட்டியடைக்க சம்பத்தால் 'காண்டிராக்ட்' கொடுக்கப்பட்டவர்— அவரைத் தவிர்த்து, பதினாயிரம் ரூபாய்க்குமேல் மிச்சமான அந்த மாநாட்டின் வெற்றிக்குப் பாடுபட்டவர்களில் ஒரு தோழர் இருக்கிறாரா சம்பத்திடம்!!

தொண்டர்கள் வசூலித்து, தோழர்கள் பாடுபட்டு, கண் விழித்துக் கஷ்டப்பட்டு, சேகரித்த பணத்தை எடுத்துக் கொண்டுபோக இவருக்கு என்ன உரிமை யிருக்கிறது?

கழகம் பிடிக்காதபோது, பணம் மட்டும் பிடிக்குமோ! இதோன் அரசியல் ஒழுக்கமோ—நாகரீகமோ!

"ஏன் கொடுக்கவில்லை?" என்பதற்கும் ஒரு காரணம் சொன்னாராம—கோவையில், 'பெரியார் ஈ. வெ. ராமசாமியின் திராவிடக் கழகத்திலிருந்து தி, மு. கழகம் பிரிந்தபோது, புதிய கழகத்தினர் தங்கள் வசமிருந்த தாய்க் கழகத்தின் நிதிகளை திராவிடக் கழகத்திடம் ஒப்படைக்கவில்லை என்பதை நினைவுகூர வேண்டும்' என்பதாக. தோழர் சம்பத் நம்மோடு பழகாதவராயிருந்தால், 'அடப்பாவி' என்கிற வார்த்தையே வரும். தாய்க் கழகத்தின் நிதி, எத்தனை பேரிடம் இருந்தது? பெரியாரா நிதியை விட்டுவைக்கி

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

## இது, முடிவு

புனே
24—5—61

ஒரு அரசியல் கட்சியின் சார்பில் சட்டசபைக்கோ மக்கள் சபைக்கோ உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அப்பதவியை விட்டு விலகாமல் வேறு கட்சியில் சேரக்கூடாது என்று இங்கு நடைபெற்ற சர்வகட்சிகள் மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது. மராட்டிய முதல்வர் சாவன், கம்யூனிஸ்டு தலைவர் டாங்கே, சோஷியலிஸ்டு தலைவர் எஸ். எம். ஜோஷி உள்ளிட்ட 23கட்சித் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

*...*...*

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய தகராறு போலக் கூச்சல் போட்டுக் கொண்டனர், "காலி பசங்க! ஏதோ சுத்துறாங்க!!',— என்றே வழியில் போவார் வருவோரும், அண்டை வீட்டுக் காரர்களும் எண்ணிக்கொண்டு, வாளாயிருந்தனர். இரண்டுபேரும், பயங்கரமான சண்டை போடுவது போல, இருந்த சாமான்களையும் நாற்காலி மேசைகளையும் தூக்கித் தூக்கிப் போட்டு உடைத்தனர். சாமான்கள் நஷ்டமானதுதான் மிச்சமே தவிர, யாரும்வந்ததாகத் தெரியவில்லை! இரண்டு நண்பர்களும் அலுத்துப் போய் உட்கார்ந்த போது, யாரோ கதவைத் தடதடவென்று தட்டினார்கள். "ஜானகி! நம் திட்டம் பலிக்கப் போகிறது. இந்தா! இதை சட்டைகளில் ஊற்றிக் கொள். இந்த அறையிலிருந்து, புறக்கடை வரையில், நான் தெளிக்கிறேன்" என்று வாங்கி வந்திருந்த ஆட்டு ரத்தத்தை ஊற்றி, ஜானகி கொலை செய்தது போன்ற சூழ்நிலையை உருவாக்கினான். ஜானகி கொடுத்த ரூபாய் மூவாயிரத்தையும் வாங்கிக் கொண்டு, "பயப்படாதே! துணிந்து செய்!! என்பது, கீதை வாக்கு. கண்ணன் காட்டினான் அன்று வழி! இன்று அந்தக் கண்ணனின் பக்தன் காட்டுகிறான் இந்த வழி!! எல்லாம், நன்மைக்கே குட்பை" என்று கூறியபடி, கொல்லைப் புறத்தின் வாயிலாகக் கிளம்பினான், பிரேதமாகாத பிணம். "டேய்! கமலா! என்னைவிட்டுடாதே. தீர்ப்புச் சொல்லப்போறதுக்கு முன்பு, வந்து, காப்பாத்து" என்று கத்தினான், ஜானகி. இவ்வளவும் செய்து, போலீசில் அகப்பட்டுக் கொண்டு கொலைக் குற்றத்தையும் ஒப்புக் கொண்டபிறகு இவன் வராமல் போய் விட்டால் என்ன ஆகும்! ஜானகிக்கு கமலா மீது அந்தச் சந்தேகம் வந்தது— அதனால், டேய்! டேய்! என்னைத் தூக்கிலே தொங்கவிட்டு விடாதே!!" என்று சொல்லியே விடை கொடுத்தான்!! அவன் போனதும் போலீசாரிடம் அகப்பட்டுக் கொள்ள, நடுங்கும் கைகளில் கத்தியை ஏந்திக் கொண்டு கதவைத்திறந்தான். அங்கே போலீசில்லை! அதற்கு பதில் பாலு இருந்தாள். என்ன பாலு இருந்தாளா? 'ள்' என்பது எழுத்துப் பிழையில்லை — உண்மையாகவே அங்கே ஜானகியின் அத்தை மகளான பாலுதான் நின்று கொண்டிருந்தாள்! பாலு—அவள் தந்தைக்கு ஒரே பெண்—செல்லமாக வளர்க்கப்பட்டவள். ஆண் பிள்ளையில்லாத அவள் தந்தை பாலாமணி என்கிற பெயரைப் பாலு என்றே கூப்பிடுவார்! பலரும்அவளை பாலு என்றே அழைப்பர்!!

[தொடரும்]

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

கொண்டிருப்பாரானால், மனம் கைத்து அன்றே அண்ணாதுரையைப் பகைத்துக் கொண்டு போயிருப்பார்

இதை அண்ணாதுரை எம். ஜி. ஆருக்குச் செய்த துரோகம் என்பதா? இதே சம்பத், தான் எம். பி ஸ்தானத்துக்கு நின்றுகொண்ட நன்றிக்காகவாவது எம். ஜி. ஆருக்கு ஒரு தொகுதி கொடுக்க வேண்டுமென்று கட்சியில் வற்புறுத்தி யிருக்க வேண்டும். வற்புறுத்தினாரா? தெரியவில்லை:

தனக்கொரு ஸ்தானம் தரவில்லை என்று எம், ஜி, ஆர். ஆத்திரப்பட்டாரா? எஸ்.எஸ்.ராஜேந்திரனுக்குக் கொடுத்த சான்ஸ்கூட தனக்குத் தரவில்லை என்ற எரிச்சலில் எம். ஜி. ஆர், கோபப்பட்டாரா? படவில்லை. படவில்லையானால் எம். ஜி. ஆரின் பண்பும், அடக்கமும் சம்பத்தைவிட மேம்பட்டது என்பதாகத்தானே கொள்ள வேண்டும்? பண்பும் அடக்கமும் உள்ள ஒருவருக்கு, அதல்லாத ஒருவரைவிட கட்சியில் அதிகச் செல்வாக்கு இருப்பதில் தவறு சொல்வது என்ன நியாயம்?

# கேள்வி பதில்

கே: "திராவிடர்களாகிய மலையாளத்தார் வீணுகக் கடலில் கலக்கும் தண்ணீரைக்கொடுக்க மறுக்கிறர்கள். அதே போல் கன்னடக்காரர்கள் 1974 வரை இருக்கும் காவிரி நீர்ப்பங்கீட்டு ஒப்பந்தத்தை இப்போழுதே மாற்றவேண்டும் என்கிருர்கள். இந்நிலையில் எப்படித் திராவிட நாடு அமையமுடியும்?" என்று அமைச்சர் வெங்கட்டராமன் பேசியிருக்கிருரே. உங்கள் பதில் என்ன?

திருமூர்த்தி
தல்லாகுளம்: மதுரை.

ப: திராவிட நாடு—என்கிற அமைப்பு மட்டும், அன்பு, சுதந்திரம், ஒப்புரவு எனும் அடிப்படையில் ஏற்படுமானுல், இது போன்ற 'நீ, நான்' என்கிற தகராறுச் சிக்கலே எழாது. தமிழ்நாடும், ஏனைய மூன்று பகுதிகளும் ஒன்றையொன்று சார்ந்து வாழ வேண்டிவையே. தமிழன்—தெலுங்கன்—மலையாளி—கன்னடியன் - என்கிற வேற்றுமைகள் வளருமேயானுல், இந்தச் சிக்கல், இன்னும் வளரவே செய்யும். அப்படியில்லாமல் அனைவரும் அண்ணன் தம்பிகள் தான், உன்சுகம் என் சுகம். என்கிற ஒரு தொடர்பு வேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது இன்றில்லாவிட்டாலும, இந்த நான்கு பகுதிகளும் ஒப்புரவுடன் வாழ, ஒரு கூட்டுநிலை உண்டாகாமல் போகாது! உண்டாகாமலும் நன்ருக வாழ முடியாது!!

*

கே: பண்புமிக்க தமது அன்புத் தம்பியின் தூண்டுதலைப்பயன்படுத்தி தி.மு.க. வின் கோணல்களைத் திருத்திக் கழகத்தைக் காக்கவில்லை என்று ம. பொ. சி. கூறுகிருரே! அப்படி என்ன கோணல்களை அண்ணு அவர்கள் திருத்தவில்லை? விளக்கம் தருக!

அன்பு மணி
செயோன்-பம்பாய்-22

ப: நமது கழகத்தில் கோணல்கள் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். கோணல்கள் கொள்கையில் இருக்கமுடியாது. நடைமுறையில்தான் இருக்கவேண்டும். நடைமுறை கோணல்கள் ம. பொ. சி. விருப்பப்படி திருத்தப்பட்டால் ம. பொ. சி. நம் கொள்கையை ஏற்பாரா? சும்மா வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போல, சம்பத் கிடைத்தார் சிலம்புச் செல்வருக்கு! அவ்வளவுதான் தள்ளுங்கள்!! கோணலிருந்தால் கட்சி இவ்வளவு தூரம் வளர்ந்திருக்க முடியுமா? நமக்கு நல்லவையாக இருப்பவை பிறருக்கு கோணலாயிருக்கும். ஒரு கட்சியில் கோணல்களிருந்தால், எந்தக் கட்சியிலும் இல்லாத ஒரு ஆள் சொன்னுல் அதில் பொருளுண்டு. ஒரு நல்ல கட்சி நாசமாகிறதே, என்கிற அன்பு கலந்த அனுதாபமும் இருக்கும். நாம் வாழ்வதே பிடிக்காத நொந்துபோன சங்கத் தலைவர் ம. பொ. சி.! இந்தச் சமயமும் ஒரு தாக்கு தாக்கி வைப்போம் என்பதால் இப்படியெல்லாம் பேசுகிருர்!!

*

கே: அண்ணு! கணேசன், சம்பத்துக்குப் பணம் கொடுக்கவில்லை என்று தாங்கள் எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்கிறீர்கள்? உங்கள் பதிலில் 'மர்மம்' இருக்கிறது? இதைத் தாங்கள் எப்படி நிச்சயமாகக் கூறலாம்? கணேசன் நல்ல பிள்ளை என்று எந்த விதத்தில் கூறமுடியும்?

—பி. வி. எஸ். மணி,
திருச்சி.

ப: சகோதரரே! எதையும் விளையாட்டாகவோ, ஆதாரமில்லாமலோ, எழுதுபவனல்ல நான். சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக, கழகக் கொள்கையை இணைப்பவனுமல்ல. எந்த 'மர்மத்தோடும்' வாழவேண்டிய அவசியமோ, நெருக்கடியோ அற்றவன், என்பதை நீங்களே அறிவீர்கள்! 'தினத்தந்தி' யை நம்பி ஒரு முடிவுக்கு வந்திருந்தால், போயிருந்த "மேயரை" திரும்பும்படி நாம் ஏற்றிருக்க முடியாது. பெரிய தேசீய இயக்கமான நாம் நேற்று முளைத்த காளானுக்காக யாரையும் விரோதித்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. விரோதிகளைக் குறைப்பதிலும், 'கொள்கை' வெற்றியிருக்கிறது! அண்ணுவின் அன்பு வழி, இன்னுசொலல் மூலம் எல்லோரையும் கவர்வதுதான், விரோதிகளை விரோதிகளாகவே ஆக்குவதல்ல! துரோகிகளைவிட, பிடிவாதக்காரர்கள், மேல். என் பதிலை இன்னெருமுறைப் படியுங்கள். பிஞ்சு பிஞ்சாகவே யிருந்துவிடாது! காயுமாகலாம்—கனியுமாகலாம்!!

*

சே: மதுரையில் பேசிய கூட்டத்தில் சம்பத் 'வடநாட்டான் ஒழியவேண்டும்! வடநாடு ஒழியவேண்டும்' என்று தி! மு. க. பேசுகிறது. ஒழிப்பதற்காக ஒரு கட்சி தேவையில்லை. மராட்டிய மக்கள், வங்கத்தார் முதலியவர்களை 'வடக்கத்தியர்' என்பதற்காக. எதிரிகளாக்கிக் கொள்ளலாமா?" என்று கூறினுர். தி. மு. கவைப் பொறுத்த அளவில், இது சரியா?

—இராமானுசம்,
மதுரை.

கழகம் எந்தத் தனிப்பட்ட வடவர்மீது, ஆத்திரம் கொண்டதில்லை. மனித நெறியினை மிகவும் உணர்ந்தவர், நாம். அசாமியர் மராட்டியர் வங்கத்தார் எவர்மீதும் நாம் தனிப்பட்டமுறையில் விரோதம் கொண்டவர்களல்ல. அவன் ஒழிக! இவன் ஒழிக! என்பது பெரியார் பாதை. நமது கழகத்தில் திருவெற்றியூரில் ஒரு வடநாட்டுக்காரர்கூட உறுப்பினராக இருக்கிருர்! கார்ப்பரேஷனுக்கு ஒரு இலவச ஐஸ் தண்ணீர்ப்பந்தலை ஒரு வடநாட்டுக்காரர் அளித்தபொழுது அதை அண்ணு போய் திறந்துவைத்தார்!! உலக அரசியல் கட்சிகளிலேயே, மனிதர்கள்மீது அன்பு நெறிகொண்டவர்களாவோம் நாம். யாரையும் வெறுப்பவர்களல்ல. ஒரு சில கோட்பாடுகளையும் அரசியல் வேட்டையையுமே கண்டிக்கிருேம். பார்ப்பனர்களில் ஏழைகள் இல்லாமலில்லை. வடவரிலும். இங்குள்ள ஏழைகள் போன்ருேர், இருக்கிருர்கள். ஆனல், ஏழைகள் பெயரைச் சொல்லிச் சுரண்டுகிறவன் பூர்ஷ்வா! முதலாளி!! அரசியலை ஆக்கவும் அழிக்கவும் சக்திபடைத்த இவர்கள்தான், இன்றைய வடநாட்டின்—வடநாட்டுக் காங்கிரசின்—வடநாட்டு ஆட்சியின் முதுகெலும்புகள். அவர்களது போக்கைக் கண்டிப்பது, அவர்கள் மீது படையெடுப்பது போன்றதா? ஒருக்காலுமில்லை! சம்பத்துக்கு, இருப்பதை மறைக்கும் பெரியார்த்தனம் வெகு வேகமாக ஏற்பட்டு வருகிறது!! அதன் அறிகுறியே இது!!

*

கே: கலையுலகத்தில் என்னுடைய தினசரி வருமானம் என்ன என்று தெரியுமா? நான் நினைத்தால் கழகத்தையே ஒழிக்கக் கலையுலகில் படைதிரட்ட முடியும்— என்று கவிஞர் பேசினுராமே. அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

சி. பி. ஆறுமுகம்
கோவை.

ப: கவிஞர் கண்ணதாசன் 14 குழந்தைகளின் தந்தை. அவர் இன்று நிறையப் பாடல்கள் எழுதுகிருர். நன்ருகவே சம்பாதிக்கிருர். ஆனுல், அதைவைத்து, கலையுலகத்திலிருந்து அரசியலுக்கு ஒருபடையே கொண்டு வருவேன் என்று அவர்கூறியிருந்தால், அவர் தன்னையும் உணரவில்லை திரையுலகையும் உணரவில்லையென்றே பொருள்! தொழிலையும் அரசியலையும் பிணைத்து இரண்டிலும் வெற்றி காண நினைப்பது, நிச்சயம் முடியாது.

*

'தமிழரும் ஆந்திரரும்'

*தொடர் கட்டுரை*

அடுத்த இதழில்!!

(11-ம் பக்க தொடர்ச்சி)

றவர்? பத்து ரூபாயை அவர் ஒருவரிடம் விட்டு வைத்தது உண்டா? எங்கெந்த நிதியை எடுத்துவந்தோம் என்று சம்பத் சொல்ல முடியுமா? இன்னும் கவனமிருக்கிறதே, பழவக்காரத் தெருவிலுள்ள ஒரு கட்டிடத்தில் தி. மு. கழகம் துவக்கப்பட்ட நாளன்று கவிஞர் பாரதிதாசன் கோபித்துக் கொண்டு போன காட்சி. அவர், அண்ணுவிடம் வாதாடினுர், "விடக்கூடாது பெரியாரிடம் இருக்கும் ஐந்து லட்சத்தை. வாங்க வேண்டும். இப்போதே போய் விடுதலை ஆபீசுக்குப் பூட்டு போட வேண்டும்" என்று. அண்ணு, இதற்கு ஒப்பவில்லை! அதனுல் தானே புரட்சிக் கவிஞர், கோபித்துக் கொண்டு, உங்களுடன் சேரமாட்டேனென்று போனுர்!! சம்பத்துக்கும் தெரியுமே. காஞ்சீபுரத்தில், நாம் திராவிட கழகமாயிருந்த போது வாங்கிய மனையொன்றுண்டு. பிரிந்த பிறகு, அதைக் கூட, அண்ணு வேண்டும் என்று கேட்கவில்லையே! திருவாரூர் கழகக் கட்டிடத்தை, 'வேண்டாம்' என்று அண்ணு கையெழுத்துப் போட்டுக்கொடுத்தார்! இதைப் போல் பல உள.

இதெல்லாம் தெரியாதா, நாட்டுக்கு! ஒரு ரூபாய் திராவிடக் கழகச் சொத்தை எடுத்து வந்திருந்தால், இன்னும் திட்டிக் கொண்டிருக்க மாட்டாரா அய்யா!! அந்த பழியினை அவராலேயே, இந்தப் பனிரெண்டாண்டுகளில், சுமத்த முடியவில்லையா? அதுபோதாதா, தி.மு.க, வின் கைசுத்தத்துக்கு!!

பதவி—பணம்—இரண்டும்: எந்தப்பாடும் படுத்தும், என்பதையே சம்பத்தின் போக்குகள், நமக்குத் தெளிவு படுத்துகின்றன. இப்படிப்பட்டவர் அரசியல் நாணயம் கண்ணியம்—வன்செயல்- என்று பேசும்போதுதான், நமக்கு வேதனையோடு சிரிப்பும் வருகிறது! பெறுமானம் உள்ள வீட்டுப்பிள்ளையாம் பெறுமானம்!! எங்கே போயிற்ருே, இந்த விஷயத்தில் அந்தப் பெருமானம்!?!

அரங்கண்ணல்

* * *

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-10 பவுண்ட்ரோடு சென்னை-6